Registered as a NewsPaper

விலை ரூபா:10.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | ஐப்பசி-03 | 20-10-2005 | வியாழக்கிழமை | ஓசை-245




# தமிழ் ஆயுதக்குழுக்கள் குறித்த நிலைப்பாட்டை ஐக்கிய தேசியக்கட்சி தெளிவுபடுத்தவேண்டும்

## - திருமலை தமிழ்மக்கள் பேரவை கோரிக்கை

(திருமலை)

***தமிழ் ஆயுதக் குழுக்கள் பற்றிய தனது தேர்தலுக்கு முன்னையதும், பின்னையதுமான நிலைப்பாட்டை ஐக்கிய தேசியக் கட்சி உடனடியாக வெளியிட வேண்டும். இவ்வாறு திருகோணமலை மாவட்ட தமிழ்மக்கள் பேரவையின் தலைவர் வ.விக்னேஸ்வரன் கையெழுத்திட்டு வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளார்.***

சனாதிபதித் தேர்தலில் பேரினவாதக் கட்சிகள் இரண்டுமே தமிழ் மக்களின் ஆதரவைக்கோரி நிற்கின்றன. தமிழ்மக்களைப் பொறுத்தவரையில் கடந்தகாலச் செயற்பாடுகளை வைத்துப் பார்க்கும்போது, இருவருமே ஒரே மாதிரியானவர்கள் என்பதில் எந்தவிதமான ஐயமும் இல்லை.

தற்போதைய நிலையில் சமாதானத்திற்கு எதிரான சக்திகளாக உள்ளவை தமிழ் ஆயுதக்குழுக்களே. மாறி மாறி வரும் அரசாங்கங்களுக்கு ஆதரவை வழங்குவதன் மூலம், இருப்பைத் தக்க வைத்துக் கொள்வதே அவர்களின் உள் நோக்கமாகும்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்பு பாராளு. உறுப்பினர்களை படுகொலைசெய்ய ஜே.வி.பி.திட்டம்

### பாதுகாப்பு வழங்கக்கோருகிறார் ஜோசப்பரராஜசிங்கம்

(கொழும்பு)

தமிழ் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களைப் படுகொலை செய்வதற்கு ஜே.வி.பி. திட்டம் தீட்டிவருகின்றது. ஆகவே அதனைத் தடுப்பதற்கும், பாதுகாப்பதற்கும் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.அவசர காலச் சட்ட நீடிப்பு சட்டமூலம் மீது உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலரை விடுதலைப்புலிகள் கொலை செய்யப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் தீவிரமாக மேற்கொள்ளப்படும் தேசிய எழுச்சி நாளுக்கான ஏற்பாடுகள்!

வரும் 22 ஆம் திகதி திருகோணமலையில் தமிழ் தேசியஎழுச்சி நாள் ஏற்பாடுகள் பொது அமைப்புக்களால் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

தமிழ் எழுச்சி நாளுக்கான பிரச்சார நடவடிக்கைகள் மாவட்டத்தின் பல பகுதிகளில் பரவலாக நடைபெற்று வருகிறது.

இந்த எழுச்சி நிகழ்வை கல்விச் சமூகத்தினர் முன்னெடுக்க வேண்டும் என்பதற்காக பாடசாலைகளின் அதிபர்களும் விடுதலைப் புலிகளும்சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பிலான சந்திப்பு ஒன்று கடந்த திங்கட்கிழமை தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

### -மகிந்தராஜபக்ஷவை ஆதரிப்பது-

## டக்ளஸ் மீது சந்திரிகா கடும் விசனம் ஈ.பி.டி.பிக்குள்ளும் முரண்பாடு!

மகிந்த ராஜபக்ஷபக்கம் ஈ.பி.டி.பி.யின் செயலாளர் நாயகம் டக்ளஸ்தேவானந்தா அதீத அக்கறையுடன் செயற்படுவது தொடர்பாக ஈ.பி.டி.பி. கட்சிக்குள் உள்முரண்பாடுகள் தோற்றம் பெற்றுள்ளதாக செய்திகள் கசிந்துள்ளன.

ஈ.பி.டி.பி யின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா இந்த விவகாரம் தொடர்பாக தன்னிச்சையாக முடிவுகளை எடுப்பதாகவும் கட்சிக்குள் விசனங்கள் எழுந்துள்ளன.

இந்த நிலையில் மகிந்தவின் ஜே.வி.பி. யினருடனான ஒப்பந்தத்தின்போது தன்னிடம் கலந்தாலோசிக்காது தன்னிடமிருந்து பல

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வெள்ளைப்பிரம்பு தினத்தையொட்டி இனிய வாழ்வுஇல்ல மாணவர்களின் நிகழ்வு

(அலுவலக செய்தியாளர்)

விழிப்புலனற்றவர்களுக்கான தினமாகிய வெள்ளைப் பிரம்பு தினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

விழிப்புலனற்றவர்களின் பராமரிப்பு நிலையமாகிய இனிய வாழ்வு இல்லத்தினர் இவ் வெள்ளைப் பிரம்பு தினத்தை வெகு சிறப்பாக அனுஷ்டித்தனர்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் இயங்கி வரும் இவ் இனிய வாழ்வு இல்லமானது செவிப்புலன், விழிப்புலன் மற்றும் பேச்சாற்றல் அற்றவர்களை பராமரித்து வருகின்ற நிலையில் நேற்று விழிப்புலனற்றவர்களைக் கௌரவிக்கும் முகமாக வெள்ளைப் பிரம்பு தினத்தை அனுஷ்டித்தது.

இத்தினத்தையொட்டி புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி பண்பாட்டு மண்டபத்தில் விசேட கலை நிகழ்வினை ஒழுங்கமைத்து நடாத்தியது.

நேற்றுப் பிற்பகல் 4.00 மணியளவில் ஆரம்பமான இந் நிகழ்வில் தமிழீழத் தேசியக்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கடந்த ஆண்டைவிட இவ்வாண்டு சிறி. ஊழல் மிகுந்த நாடாக மாறியுள்ளது

### ரான்ஸ்பரன்ஸி இன்டர்நஷனல் கணிப்பீடு

(கொழும்பு)

கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டு இலங்கை மிகவும் ஊழல் மிகுந்த நாடாக மாறியுள்ளதாக ரான்ஸ்பரன்ஸி இன்டர்நசனல் என்ற நிறுவனம் தெரிவித்துள்ளது. இந் நிறுவனம் விடுத்துள்ள 2005ஆம் ஆண்டிற்கான அறிக்கையிலேயே இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

உலகெங்கிலும் உள்ள 159 நாடுகளில் முறைகேடுகள் மற்றும் ஊழல்கள் என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டு இந்த அறிக்கை உருவாக்கப்பட்டுள்ளது. இதில் ஊழல்கள் தொடர்பான சர்வதேச தர வரிசை பட்டியல் படுத்தப்பட்டுள்ளது. பூச்சியத்தில் இருந்து ஆயிரம் வரையான புள்ளிகள் அடிப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## நால்வர் பதவி நீக்கம்

(கொழும்பு)

அம்பாறை பொத்துவில் பிரதேசத்தின் நகர்ப்பகுதியில் இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் பொலிசார் ஒருவர் பலியானது தொடர்பாக நான்கு பொலிஸ் அதிகாரிகள் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தின் போது உயிரிழந்த பொலிஸ் கான்ஸ்டபிளுக்குப் பாதுகாப்பு வழங்கவில்லை என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே இவர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளதாக பொத்துவில் பிரிவுக்குப் பொறுப்பான பொலிஸ் அத்தியட்சகர் றொகான் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

## புலிகளின் பகுதியில் வீழ்ந்து நொருங்கியது சிறிலங்காவின் ஆளில்லா வேவு விமானம்

தமிழீழ விடுதலைப்புலிகளின் நிர்வாகப் பகுதியில் சிறிலங்காவின் ஆளில்லா வேவு விமானம் நேற்று பிற்பகல் 1.50 மணியளவில் வீழ்ந்து நொருங்கியது.

வவுனியா நகரிலிருந்து 30 கிலோ மீற்றர் தொலைவில் கனகராயன் குளத்துக்கு கிழக்காக உள்ள விஞ்ஞான குளத்துக்கும் ஒன்பதாம் கட்டைக்கும் இடையில் இந்த வேவு விமானம் வீழ்ந்ததாக அப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

வவுனியா சிறிலங்கா விமானப் படைத் தளத்திலிருந்து இந்த விமானம் புறப்பட்டு கிளிநொச்சி வான் பரப்பில் பறந்து வேவுப் படங்களை எடுத்துக் கொண்டிருந்தது.

அப்போது விமானம் கட்டுப்பாட்டை இழந்து வீழ்ந்தது. வவுனியா விமானப் படைத் தளத்திலிருந்து தொலை இயக்கி மூலம் இந்த விமானம் கட்டுப்படுத்தப்பட்டுக் கொண்டிருந்தது.

விமானம் வீழ்ந்து நொருங்கிய பகுதி தமிழீழ விடுதலைப்புலிகளின் நிர்வாகப் பகுதி என்பது குறிப்பிடத்தக்கது. இந்த ஆளில்லா வேவுவிமானம் காணாமல் போயுள்ளதை சிறிலங்கா விமானப்படை ஊர்ஜிதம் செய்துள்ளது.

இந்த விமானம் மூலமே போர் இல்லாத காலத்தில் தமிழீழ விடுதலைப்புலிகள் குறித்த பல தகவல்களை சிறிலங்கா இராணுவம் சேகரித்து வந்தது.

முன்னைய போர்க்காலங்களிலும், தமிழர் குடியிருப்புப் பகுதிகளின் மீது குண்டு வீசி அப்பாவித் தமிழர்கள் ஆயிரக்கணக்கில் படுகொலை செய்யப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## 79 கொத்தணி வாக்குச்சாவடிகள்

வன்னி தேர்தல் மாவட்டத்தின் இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசங்களைச் சேர்ந்த வாக்காளர்கள் வாக்களிக்க வசதியாக 79 கொத்தணி வாக்குச்சாவடிகள் அமைக்கப்படவுள்ளன.

மன்னார் உயிலங்குளம் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் 12 கொத்தணி வாக்குச் சாவடிகள் அமைக்கப்படவுள்ளதுடன் மடு வீதியில் உள்ள புனித அந்தோனியார் தேவாலயத்தில் நான்கு வாக்குச் சாவடிகள் அமைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஓமந்தை மத்திய மகாவித்தியாலயத்தில் 63 கொத்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# வரிவிளம்பரம்

## 10 நிமிடத்தில் படங்கள்!!!

அவசர தேவைக்கான பாஸ் மற்றும் சகல அடையாள அட்டைப் படங்களையும் உடன் வழங்குகின்றோம். டிஜிற்றல் அல்பம்,டியுறோ பிறேம், சகல லமினேசன் வேலைகளுக்கும்!!! (காலை 7.30 மணி தொடக்கம் எமது சேவையினைப் பெற்றுக்கொள்ளுங்கள்) யாழ்ஒளி K.S.R. PHOTOES) இல.05 கனகபுரம் தெரு, கிளிநொச்சி, (பேருந்து நிலையம் ,சந்தை அருகாமை).

(6849)

## புதிய பிரிவுகள் ஆரம்பம்

புகைப்படத்துறையில் புதிய நுட்பங்களை உருவாக்கக் கூடிய

**Adobe Photoshop**

வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன. தொடர்புகளுக்கு:-வின்நெற் கணணி பயிற்சிநிலையம், டிப்போவீதி, கிளிநொச்சி. (சி.13074)

## விற்பனைக்குண்டு

நல்ல நிலையில் உள்ள இரண்டு இஞ்சின்கள் England Lister (16hp, 12hp ) விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு சுதா அரைக்கும் ஆலை, புளியடிச்சந்தி, விசுவமடு. (6858)

# சிறிகுகனின் இசையில் உருவான பசுந்தேசம் பாடல் ஒலிப்பேழை வெளியிடப்பட்டுள்ளது

சிறிகுகனின் இசையில் உருவான பசுந்தேசம் பாடல் ஒலிப்பேழை வெளியீட்டுவிழா நிகழ்வு நேற்று புதன்கிழமை முற்பகல் பத்து மணிக்கு மன்னார் மாவட்டத்திலுள்ள ஆண்டான் குளம் றோமன் கத்தோலிக்க மகாவித்தியாலயத்தில் மூத்த எழுத்தாளரும் சிறுகதை ஆசிரியருமான சிதம்பரதிருச்செந்திநாதன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் மங்கல விளக்கினை இரண்டாம்லெப்டினன்ட் மாலதி அவர்களது தந்தையாரான ம.பேதுருப்பிள்ளை ஏற்றிவைத்தார்.

பொதுச்சுடரினை மன்னார் மாவட்ட விவசாய சம்மேளனத் தலைவர் எஸ்.சௌந்தரராஜன் ஏற்றி வைத்தார்.

தமிழீழ தேசியக்கொடியை மன்னார் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் எஸ். இனியவன் ஏற்றி வைத்தார்.

வரவேற்புரையினை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன செய்திவெளியீட்டுக்கிளையைச் சேர்ந்த தேவகருணாநிதி வழங்கினார்.

தலைமையுரையை நிகழ்வின் தலைவர் வழங்கினார்.

ஒலிப்பேழையின் வெளியீட்டுரையை புலிகளின் குரல்நிறுவனப் பொறுப்பாளர் நா.தமிழன்பன் வழங்கினார்.ஒலிப்பேழையின் மதிப்பீட்டுரையை எழுத்தாளர் பு.சத்தியமூர்த்தி வழங்கினார்.

ஒலிப்பேழை வெளியீட்டினை தமிழீழபொருண்மிய மேம்பாட்டு நிறுவனப்பொறுப்பாளர் சி.கரிகாலன் அவர்கள் வெளியிட்டு வைக்க தமிழீழ அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் பெற்றுக் கொண்டார். முதலாவதுபிரதி ஒலிப்பேழையை-தமிழீழபொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்துணைப் பொறுப்பாளர் சு.சின்னண்ணைவெளியிட்டு வைக்க தமிழ் தேசிய கூட்டமைப்புபாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் மற்றும் ஆட்காட்டி வெளி உதவி அரசாங்க அதிபர் பெற்றுக்கொண்டார். இதனைத்தொடர்ந்து 11பாடல் பாடிய கலைஞர்கள் 38பேர் கௌரவிக்கப்பட்டு இவர்களுக்கான பரிசுகளும் வழ்ங்கப்பட்டன.

நன்றிஉரையினை மன்னார் மாவட்ட த.பொ.மே.நிறுவனப் பொறுப்பாளர் செழியன் வழங்கினார்.

தமிழீழ தேசத்தில் சிறிலங்கா அரசால் சமாதானகாலத்திற்கு முன்னர் விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடைகளை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும் தமிழ்பேசும் மக்களும் இணைந்துதகர்த்து எறிந்து மக்களை மேம்பாடு அடையவைத்தது. இன்று மக்களின் தேவைகளுக்காக ஓர்ஒலிப்பேழையை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் வெளியிட்டு வைத்துள்ளது.இப் பாடல்களில் எமது தேசத்தின் வளங்கள் பாடப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (46)

# புனர்நிர்மாண பொறியியலாளர்கள் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள்

UNDP

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித்திட்டத்தின் அனுசரணையில் பொது நிர்வாக மற்றும் உள்விவகார அமைச்சினால் அமுல்படுத்தப்படவுள்ள மீட்பு நிகழ்ச்சித்திட்டத்திற்கான திறன் அபிவிருத்தி செயற்திட்டத்தின் (CADREP) கீழ் யாழ். மாவட்டத்திற்கென கீழே குறிப்பிடப்பட்ட பதவிகளுக்காக பொருத்தமான விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. புனர்நிர்மாண பொறியியலாளர்கள் - 1 வெற்றிடம்
2. தொழில்நுட்ப அலுவலர்கள் - 3 வெற்றிடங்கள்

பொறியியலாளரும் தொழில்நுட்ப அலுவலர்களும், வடிவமைத்தல்,கிரய மதிப்பீடும் உறுதிப்படுத்தலும், கட்டட பரும அளவு (BOQ) தயாரித்தல், சோதனையிடல் மற்றும் தரக் கண்காணிப்புச் செய்தல் உள்ளடக்குகின்ற புனர்நிர்மாண வேலையுடன் தொடர்புடைய எல்லா வேலைகளிலும் அரசாங்க அதிபர்/மாவட்ட செயலாளருக்கு உதவி புரிதல் வேண்டும்.

| புனர்நிர்மாண பொறியியலாளர் | தொழில்நுட்ப அலுவலர்கள் |
|---|---|
| **கல்வித்தகைமை:-** கட்டட நிர்மாணத்துறையில் இளமாணிப்பட்டதாரி அல்லது தொழில்சார் தகைமை உடையவராயிருத்தல் அவசியம். முகாமைத்துவ தகைமையுடையவருக்கு முன்னுரிமை வழங்கப்படும். | **கல்வித்தகைமை** கட்டட நிர்மாணத்துறையில் தொழில்நுட்ப தகைமைஅல்லது தொழில்சார் தகைமையுடையவராய் இருத்தல் அவசியம். |
| **தொழில்சார் அனுபவம்** குறைந்தது 10 வருட தொழில்சார் அனுபவம் பெற்றவராய் இருப்பது அவசியம், நடுத்தரமற்றும் பாரிய கட்டட நிர்மாண நிகழ்ச்சித்திட்டங்களில் பங்கு பற்றியிருப்போருக்கு முன்னுரிமை வழங்கப்படும். | **தொழில்சார் அனுபவம்** குறைந்தது எட்டு வருட தொழில்சார் அனுபவம் பெற்றவராய் இருப்பது அவசியம். |

இப்பதவிகளுக்கு கவர்ச்சிகரமான ஊதியம் வழங்கப்படுவதுடன் ஆரம்பத்திற்கு புதுப்பிக்கக் கூடிய சாத்தியக்கூறுகளுடனான ஒரு வருட ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்படுவார்கள், இளைப்பாறிய அதிகாரிகள் மற்றும் தற்போது உத்தியோகத்திலுள்ள பொதுச் சேவையாளர்களும் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

ஆர்வமுள்ள, தகுதிவாய்ந்த விண்ணப்பதாரிகள், இரண்டு உறவினரல்லாத நடுவர்கள் அடங்கிய தொலைபேசி இலக்கங்களுடன் சுயவிபரத்துடனான விண்ணப்பத்தை விளம்பரம் பிரசுரிக்கப்பட்டு பத்து நாட்களுக்குள் யாழ். அரசாங்க அதிபர்/மாவட்ட செயலாளர், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல்வேண்டும்.

*விண்ணப்பத்தின் பிரதி ஒன்றை பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.*

**நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர்,**
**நிகழ்ச்சித்திட்ட முகாமைப்பிரிவு,**
**கட்றெப் நிகழ்ச்சித்திட்டம்,**
**7ஆவது மாடி, அரசாங்க நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு**
**சுதந்திர சதுக்கம்,**
**கொழும்பு 07**

குறிப்பு :- 16.10.2005 (ஞாயிறு) தேசிய நாளேடுகளுக்கு ஏற்ப விண்ணப்பித்தவர்கள் மீள விண்ணப்பிக்கத்தேவையில்லை.

**க.கணேஷ்,**
**அரசாங்க அதிபர் /மாவட்ட செயலகம்**
**யாழ்ப்பாணம்.**

(சி-13049)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்

*மு/வற்றாப்பளை ம.வி. அதிபர் உயர்திரு நடராசா இரங்கநாதன் (B.A.Hon, S.L.P.S-2-II M.Ed) அவர்கள் 07.10.2005 அன்று யாழ் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற பட்டமளிப்பு விழாவில் முதுகல்விமானி (M.Ed) பட்டம்பெற்றுக்கொண்டமையை மனமுவந்து பாராட்டிவாழ்த்துகின்றோம். மேலும் பட்டங்கள் பெற வாழ்த்துகின்றோம்.*

**திரு. செ. யோகேஸ்வரன்**
**(குடும்பம்)**
வற்றாப்பளை.

(6628)

# நினைவில் நீங்கா ஐந்தாம் ஆண்டு

| ஈன்றவள் மடியில் | | ஈழத்தாய் மடியில் |
|---|---|---|
| 25 - 07 - 1975 |  | 21 - 10 - 2000 |

## கப்டன் மலரவன்/வேலவன்/முத்தையா
## (இரத்தினசிங்கம் நாதரூபன்)

ஆண்டுகள் ஐந்து மறைந்தாலும்
மலரவா எங்கள் வேலவா
மறப்போமா உன் பூ முகத்தை
மாவீரர் வேலவனின் ஐந்தாம் ஆண்டு
வீர வணக்க நிகழ்வு முத்துஐயன் கட்டு
புனித பூமி சிறுவர் கல்வி நலன் காப்பகத்தில்
21.10.2005 நாளை நிகழும் என்பதை
அறிவித்துக்கொள்கிறோம்.

**குடும்பத்தினர்,**
**புனிதபூமி சிறுவர்கள்,**
**போராளிகள், ஆசிரியர்கள்,**
**நிர்வாகிகள்.**

(சி-6867)

ஒக்ரோபர் வாசிப்பு மாதம்

*வகுப்பறைகளில் சிறார்களின் பிறழ்வு நடத்தைகளும் சிறுவர் அரங்கச் செயற்பாடுகளும்*

வருடாந்தச்சந்தா ரூ.300 மட்டுமே

வாசியுங்கள்

தொடர்புகளுக்கு AHAVILI,3,Torrington Vvenue,colombo-7,Srilanka,
TEL:011-2506272 E-MAIL:ahavili @ Viluthu.org

அகவிழி


ஆசிரியத்துவ நோக்கு

# தான் குற்றமற்றவன் என்றார் சதாம் ஹுசேன் வழக்கு விசாரணை நவம்பர் 28 இற்கு ஒத்தி வைப்பு

(பாக்தாத்)

**“ நான் என்ன செய்தேன் நான் குற்றமற்றவன் என முன்னாள் ஈராக் சனாதிபதி ே றயதினம் நடைபெற்ற அவர் மீதான வழக்கு விசாரணையின் ,பாது ு றிப்பிட்டார்.**

1982 ஆம் ஆண்டு 150 ஷியா முஸ்லிம்களை படுகொலை செய்த சம்பவத்



தில் குற்றம் சாட்டப்பட்டிருக்கும் சதாம் ஹுசேன் மீதான வழக்கு விசாரணை நேற்றைய தினம் நடைபெற்றது. இவ் விசாரணையின் போதே அவர் மேற் கண்டவாறு குறிப்பிட்டிருக்கிறார்.

ஈராக் தலை நகரிலுள்ள நீதிமன்றம் ஒன்றில் சுமார் மூன்று மணி நேரம் இடம் பெற்ற இவ் வழக்கு விசாரணையில் வழக்கை முன்னெடுத்துச் செல்லும் நீதிபதி றிஸ்க்கர் முகமட் அமீன் பிரதிவாதிகளின் குற்றங்களையும், அவர்களுக்குரிய உரிமைகளையும் வாசித்தார். பின்னர் அவர்களின் வாக்குமூலங்களை கேட்டார் முதலாவதாக 68 வயதுடைய சதாம் ஹுசேனிடம் நீ குற்றவாளியா எனக் கேட்டார்.

'நான் குற்றமற்றவன் எனப் பதிலளித்த சதாம் சிறிது நேரம் அமைதியாக இருந்து விட்டு எழுந்து நீதிமன்ற அறையினுள் நடக்க ஆரம்பித்தார். இதனை அவதானித்த பாதுகாப்பு உத்தியோகத்தர் சதாமை இரு கைகளிலும் பிடித்துத் தடுக்க முயன்றனர். அவர்களை தள்ளி தனது எதிர்ப்பைக் காட்டிய சதாம்



தொடர்ந்து நடக்கத் தொடங்கினார். பின்னர் பாதுகாப்புப் பிரிவினர் சதாமைத் தடுக்க முயலவில்லை. சதாம் உட்பட ஏழு பேரிடம் வாக்கு மூலங்களை பெற்ற நீதிபதி இவ் வழக்கை நவம்பர் மாதம் 28 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

## ஓமான் நாட்டிலிருந்து ஐயாயிரம் இந்தியர்கள் திரும்புகின்றனர்

ஓமான் நாட்டிலிருந்து ஐயாயிரம் இந்தியர்களை இந்தியாவுக்கு அழைத்து வருவது தொடர்பாக இடம்பெற்ற பேச்சு வார்த்தையில் இணக்கம் காணப்பட்டுள்ளது.

இவர்களுக்கு ஓமானில் வேலை பார்க்க வழங்கப்பட்ட அனுமதி காலாவதியானதையடுத்து அவர்கள் பணியில் இருந்து நீக்கப்பட்டனர். ஆனால் அவர்கள் இந்தியா திரும்ப அனுமதிக்கப்படவில்லை. தொடர்ந்து பணியாற்றவும் அனுமதிக்கப்படவில்லை.

இந்திய அரசுக்கு இதுபற்றி தகவல் கொடுக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து ஓமான் நாட்டின் மஸ்கட் நகரிலுள்ள இந்திய தூதர் அலுவலக அதிகாரி, ஓமான்நாட்டு அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினார். இதில் ஓமானில் தவித்த ஐயாயிரம் இந்தியர்களும் நாடு திரும்ப அனுமதி வழங்க ஓமான் அரசு முடிவு செய்தது.

இது தொடர்பாக இப்போது முறைப் படியான அறிவிப்பையும் வெளியிட்டுள்ளது.

## பூமி அதிர்வைப் பயன்படுத்தி கைதிகள் தப்பியோட்டம்

(இஸ்லாமபாத்)

சமீபத்தில் பாகிஸ்தானை உலுக்கிய பூகம்பம், பேரழிவை ஏற்படுத்தியது. பாகிஸ்தான் பகுதி காஷ்மீரின் தலைநகரான முஷபராபாத் 80 சதவீதத்துக்கு மேல் அழிந்து விட்டது. இந்நிலையில் முஷபராபாத்தில் உள்ள சிறையில் மரண தண்டனைக் கைதிகள் 120 பேர் இருந்தனர்.

பூகம்பத்தால் அந்த சிறையில் இருந்த பல அறைகள் இடிந்து விழுந்து 15 கைதிகள் இறந்தனர் 40 பேர் காயமடைந்தனர்.

அதேநேரத்தில் பூகம்ப பரபரப்பைப் பயன்படுத்தி மரண தண்டனைக் கைதிகள் 60 பேர் தப்பி ஓடிவிட்டனர் எனும் பரபரப்புத் தகவல் ஒன்று வெளியாகியுள்ளது.

## அமெரிக்காவைத் தாக்க வரும் வில்மா புயல் மக்கள் எச்சரிக்கப்பட்டுள்ளனர்

(மியாமி)

அமெரிக்காவை ‘வில்மா’ என்ற இன்னுமொரு புயல் தாக்கவுள்ளது. மணிக்கு 120 கிலோ மீற்றர் வேகத்தில் புயல் தாக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. அமெரிக்காவில் கடந்த சில வாரங்களுக்கு முன்பு தான் கற்றினா என்ற சூறாவளி தாக்கியது. இதை அடுத்து றீற்றா என்ற சூறாவளி தாக்கியது. அடுத்தடுத்து சூறாவளி தாக்கியதில் அலபாமா, லூசியானா, மிசிசிப்பி, புளோரிடா ஆகிய மாநிலங்கள் கடும் பாதிப்பைச் சந்தித்தது.

10000 இற்கும் மேற்பட்டவர்கள் இதில் பலியாகினர். நியூ ஓர்லியன்ஸ் நகரம் கடல் நீர் புகுந்ததால் முற்றிலுமாகப் பாதிக்கப்பட்டது.

இந்தப் புயல் சேதத்தில் இருந்து அமெரிக்க மக்கள் மீளாத நிலையில் அமெரிக்காவிற்கு இன்னொரு சூறாவளி எச்சரிக்கை விட்டிருக்கின்றது. இச் சூறாவளிக்கு “வில்மா” என்று பெயரிட்டு இருக்கிறார்கள்.

இப்போது கரிபியன் கடல் பகுதியில் இந்தப் புயற் சின்னம் உருவாகியுள்ளது. இப் புயல் மேலும் வலுவடைந்து வருகிறது. அத்துடன் இப் புயல் மெக்சிக்கோ வளைகுடா பகுதியை நோக்கி நகர்ந்து வருகிறது. மேற்கு நோக்கி நகரும் புயல் கியூபா, நிக்கராகுவா, ஹொண்டுரா, மெக்சிக்கோ, அமெரிக்காவின் புளோரிடா உட்பட கடற்கரைக் பகுதிகளைத் கடுமையாகத் தாக்கக் கூடும் அப்போது மணிக்கு 120 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசும். இதனால் அமெரிக்காவின் கடலோரப் பகுதியில் உள்ளவர்களுக்கு புயல் எச்சரிக்கை விடப்படுகிறது. மெக்சிக்கோவை தாக்கி விட்டு சனிக்கிழமை இது புளோரிடா வைத் தாக்கும் என அமெரிக்க வானிலை நிலையத்தின் அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## லெபனானில் உள்ள பலஸ்தீன ஆயுதங்கள் சம்பந்தமாய் முன் நிபந்தனையின்றி பேசத் தயார்

-பலஸ்தீன தலைவர் மகமுத்அப்பாஸ்

லெபனானில் இருக்கும் பலஸ்தீன ஆயுதங்கள் சம்பந்தமாக முன்நிபந்தனை எதுவுமின்றிப் பேச்சுவார்த்தை நடத்துவதற்குத் தயாராக இருப்பதாக பலஸ்தீனத் தலைவர்மகமூத் அப்பாஸ் தெரிவித்துள்ளார்.

லெபனான் பிரதமமந்திரியைச் சந்தித்ததன் பின்னர் அவர் இந்தக் கருத்துக்களைத் தெரிவித்தார்.

லெபனானில் இருக்கும் பலஸ்தீனியர் பற்றிக் குறிப்பிடும் போது அவர்கள் லெபனானில் விருந்தாளிகளாக இருக்கிறார்கள். நீதிக்கு மேலாக அவர்கள் தம்மைக் கருதக்கூடாது என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டுமென்று கூறினார்.

லெபனான் பிரதம மந்திரி கருத்துத் தெரிவிக்கும்போது அகதிமுகாம்களுக்கு வெளியே பலஸ்தீனியர்கள் ஆயுதங்கள் வைத்திருப்பது லெபனானின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாகவுள்ளது. முகாம்களுக்குள்ளிருக்கும் ஆயுதங்கள் பற்றியும் பேச்சுவார்த்தை நடத்தப்படும் லெபனானில் அண்மையில் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கம் லெபனானில் இருக்கும் ஆயுதக் குழுக்கள் சம்பந்தமாக பாரிய சவால்களை எதிர்நோக்குகின்றது என்று செய்தியாளர்கள் கூறுகின்றனர்.

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் 1589ஆவது தீர்மானத்தின் படி பெரிய துருப்புக்கள் இவ்வருட ஆரம்பத்தில் லெபனானை விட்டு வெளியேறும் இந்தத் தீர்மானத்தின்படி லெபனானிலுள்ள போராட்டக்குழுக்கள் ஆயுதக்களைவை செய்ய வேண்டுமென்றும் வலியுறுத்தப்பட்டது. லெபனானில் ஏராளமான பலஸ்தீனியர்கள் அகதிகளாக இருக்கின்றார்கள்.

இவர்களில் அனேகமானவர்கள் பல சட்ட கட்டுப் பாடுகளுக்கு உட்பட்டு இருக்கின்றார்கள். 1975 ஆம் ஆண்டிலிருந்து 1990ஆம் ஆண்டு வரை அயல்நாடுகளான சிரியா பலஸ்தீன விடுதலை இயக்கம் இஸ்ரேல் ஆகியன யுத்தத்தில் ஈடுபட்டதனால் லெபனான் பல இன்னல்களுக்கு முகம் கொடுக்க நேரிட்டது.

இவை தமது சொந்தப்பிரச்சினைக்கு லெபனானை ஒரு தளமாக வைத்திருக்க முனைந்தன எனத் தெரிவித்தார்.



தாய்வானில் குடும்பத் திருவிழாக் கொண்டாட்டத்தை முன்னிட்டு தலைநகர் தைபேயில் நடைபெற்ற ஒரு வயதுக் குழந்தைகளுக்கான நாலு கால் பாய்ச்சல் போட்டியில் உற்சாகத்துடன் பங்கு கொள்ளும் சிசுக்கள்.

## அமெரிக்க சுரங்கப் பாதைகளை தகர்க்க சதி முயற்சி

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் பால்டிமோர் பகுதியில் உள்ள சுரங்கப் பாதையில் வெடிகுண்டு வைத்து நாசவேலை நடத்த தீவிர வாதிகள் சதித் திட்டம் தீட்டியிருப்பதாக அமெரிக்க உளவுத் துறையினர் தகவல் கொடுத்தனர். இதைத் தொடர்ந்து அந்தப் பகுதியில் உள்ள சுரங்கப் பாதைகள் மூடப்பட்டுள்ளன. அதன் அருகே செல்லும் வாகனங்கள் அனைத்தையும் தடுத்து நிறுத்தி சோதனை போட்டு வருகிறார்கள்.

## பாதிக்கப்பட்ட குவாத்தமாலாவை ஸ்பெயின்ராணி பார்வையிட்டார்

குவாத்தமாலாவில் சூறாவளியினால் பாதிக்கப்பட்ட பகுதிகளை ஸ்பெயின் நாட்டு மகராணி சென்று பார்வையிட்டுள்ளார்.

சூறாவளியினால் வெள்ளம் மற்றும் மண்சரிவினால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கும் அவர் சென்றார்.

குவாத்தமாலாவில் பாதிக்கப்பட்ட குழந்தைகளையும், வீடுகளை இழந்த மக்களையும் அவர் சென்று பார்வையிட்டுள்ளார். குவாத்தமாலாவில் வெள்ளம் மற்றும் மண் சரிவில் சிக்கி 650 பேர் பலியானதுடன் 400 பேர் மண் சரிவில் சிக்கி காணாமல் போயுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக் கூடும் என அஞ்சப்படுகிறது.

## உகண்டா முதலாவது சனாதிபதியின் பூதவுடல் அவரது சொந்த நாட்டிற்கு

சுதந்திர உகண்டாவின் முதலாவது சனாதிபதி மில்டன் ஒபேட்டோவின் பூதவுடல் மீண்டும் உகண்டாவிற்குக் கொண்டு செல்லப் பட்டுள்ளது. கடந்த இரண்டு தசாப்தத்திற்கு மேலாக ஷம்பியாவில் தஞ்சமடைந்திருந்த நெல்டன் ஒபேட்டோ சிறுநீரகக் கோளாறு காரணமாக இம்மாதம் 10ஆம் திகதி உயிரிழந்தார்.

உகண்டாவின் இரண்டாவது தடவை இராணுவ ஆட்சியாளர்களினால் இவர் பதவி விலக்கப்பட்டு நாடு கடத்தப்பட்டார். 1962ஆம் ஆண்டு காலப்பகுதியில் பிரித்தானிய ஆட்சியாளர்களிடமிருந்து உகண்டாவிற்கு சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுத்த தலைவர் என்ற வகையில் அந்நாட்டு மக்களால் அவர் இன்றும் நினைவு கூரப்படுகின்றார்.

எனினும் அவரது ஆட்சிக் கால இறுதியில் அவர் செயற்பட்ட விதம் ஆயிரக்கணக்கானோர் உயிரிழப்புக்கு காரணமாக அமைந்தது எனப் பலர் குற்றம் சாட்டியுள்ளனர்.








ஜேர்மனியில் சிறப்புற நடைபெற்ற நினைவெழுச்சி நாள்–2005 நிகழ்வில்..........

# நினைவெழுச்சி நிகழ்வு நாள்-2005

# ஜேர்மனியில் சிறப்புற அனுஷ்டிப்பு

(பேர்லின்)

**ஜேர்மனி கயில்புறோன் பாட்பிறிட்டிசால் நகரில் நினை வெழுச்சி நிகழ்வு நாள்-2005 கடந்த சனிக்கிழமை சிறப்பாக நடைபெற்றது.**

இந்நிகழ்வில் 2ஆம் லெப். மாலதியின் 18 ஆம் ஆண்டும், லெப் கேணல் குமரப்பா, லெப். கேணல் புலேந்திரன் உட்பட பன்னிரு வேங்கைகளின் 18 ஆம் ஆண்டும், ஜேர்மனியின் பொறுப்பாளராக இருந்து வீதி விபத்தொன்றில் மாவீரரான மேஜர் சுரேந்தியின் 14 ஆம் ஆண்டும், கயில் புறோன் பாட் பிறிட்டிஸ்சால் நகரத்திலேயே ஆரம்பகாலம் முதல் தமிழீழ விடுதலைக்காகத் தன்னை அர்ப்பணித்து பணியாற்றி சுகவீனம் காரணமாக மாவீரரான நாட்டுப்பற்றாளர் கந்தசாமி சிவநாதன் அவர்களின் நான்காம் ஆண்டு நினைவு நாளும் நினைவு கூரப்பட்டது. நிகழ்வில் தமிழீழ தேசியக்கொடியை கயில்புறோன் நகர செயற்பாட்டாளர் மகேஸ்வரன் ஏற்றி வைத்தார். ஈகச்சுடரினை நாட்டுப் பற்றாளர் கந்தசாமி சிவநாதன் அவர்களுடைய மனைவி சிவநாதன் கலாநிதி ஏற்றிவைத்தார்.பல கலை நிகழ்வுகளும் இதில் இடம்பெற்றன.

## நெற் செய்கையினை மேம்படுத்த வாகரைப் பிரதேச மக்களுக்கு உதவி

(அலுவலக செய்தியாளர்)

திருகோணமலை மாவட்ட வாகரைப் பிரதேச மக்களுக்கு நெற் செய்கையினை மேம்படுத்தும் வகையில் விதைநெல்லும் அதற்கான விவசாய உள்ளீடுகளும் கடந்த திங்களன்று வழங்கப்பெற்றன.

திருகோணமலை மாவட்ட வாகரைப் பிரதேசத்தைச் சேர்ந்த கட்டு முறிவு, ஆண்டாங்குளம், கதிரவெளி, வம்மிவெட்டுவான், வாகரை ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 58 விவசாயிகளுக்கு தலா ஒரு ஏக்கர் நெற்செய்கைக்கான 7000 ரூபா பெறுமதியுடைய விதைநெல்லும் அதற்கான விவசாய உள்ளீடுகளும் த.பொ.மே. நிறுவன திருமலை மாவட்ட பொறுப்பாளர் .மங்களேஸ் தலைமையில் வாகரைப் பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கப் பெற்றது. உலக உணவு விவசாயத் திட்ட இணைப்பாளர் இராசநாயகம், வாகரைப் பிரதேச விவசாய போதனாசிரியர் ஆகியோர் மேற்படி நிகழ்வில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (சோ)

## வர்த்தகர் நலன் கருதி விளம்பர சேவை

பூநகரி வர்த்தகர்களின் நன்மை கருதி விளம்பர சேவை ஒன்று ஒலிபெருக்கி மூலம் ஏற்படுத்தப் படவுள்ளது. இது தொடர்பாக விபரமறிய விரும்புவோர் பூநகரி ப .நோ.கூ. சங்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அதன் தலைவர் தெரிவித்துள்ளார். (34)



கிளிநொச்சி நகரப்பகுதியில் கிளி/மகாவித்தியாலயத்திற்கும் மாவட்ட நிர்வாகசேவை பணிமனைக்கும் அருகாகச் செல்லும் வீதியில் பாரிய குழிகள் காணப்படுகின்றன. இக்குழிகளில் மழைகாலங்களில் நீர் நிரம்பி காணப்படுகின்றது. இதனால் இவ் வீதியூடாகச் செல்லும் பாடசாலை மாணவர்கள், திணைக்களங்களின் ஊழியர்கள், பொதுமக்கள் எனப் பலரும் பல அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளனர். (படம்–குகன்)

## கரைச்சிப் பிரதேச செயலக பிரிவில் காணிப்பிரச்சினைகளுக்கு நடவடிக்கை

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலக காணி அலுவலகத்தின் நடமாடும் சேவைகள் மூலம் தற்போது கரைச்சிப்பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதிகளிலுள்ள காணி சம்பந்தமான பிரச்சினைகள் இனங்காணப்பட்டு அதற்கான உரிய நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதனடிப்படையில் எதிர்வரும் 21ஆம் திகதியன்று வன்னேரிக்குளம், ஆனைவிழுந்தான் கிராமமக்களுக்கு காணி அனுமதிப்பத்திரம் வழங்கும் நடவடிக்கைகள் ஆனைவிழுந்தான் கிராம முன்னேற்றச்சங்க மண்டபத்தில் காலை ஒன்பது மணி முதல் பிற்பகல் 3.30 வரையும் மேற் கொள்ளப்படவுள்ளன.

அதேபோன்று எதிர்வரும் 24ஆம் திகதியன்று அம்பாள்குளம் கிராம மக்களுக்கான காணிசம்பந்தமான விசாரணைகள் கரைச்சிப் பிரதேச செயலக காணி அலுவலகத்திலும் நடைபெறவுள்ளதென கரைச்சிப் பிரதேச செயலகக்காணி உத்தியோகத்தர் செ.ஸ்ரீரெங்கநாதன் தெரிவித்துள்ளார். (சோ)

## கிளிநொச்சி மத்திய தபாலகம் மின்சார வசதியின்றி அவலம்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட மத்திய தபாலகத்தில் மின்சார வசதி இன்மையால் மழைகாலங்களில் ஊழியர்களும், மக்களும் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

கிளிநொச்சி தபாலகம் இன்றுவரை புனரமைக்கப்படாத நிலையில் காட்சியளிக்கின்றது. கிளிநொச்சியிலுள்ள ஏனைய அரச திணைக்களங்களுடன்



ஒப்பிடும் போது தபாலகம் மட்டுமே இன்னும் புனரமைக்கப்படாத நிலையில் காட்சியளிக்கின்றது. அத்துடன் மின்சார வசதி இதுவரையும் ஏற்படுத்தி கொடுக்கப்படவில்லை. இதனால் தபால் ஊழியர்கள் மழைகாலங்களில் "பெட்ரோல்மாக்ஸ்" வெளிச்சத்தைப் பயன்படுத்தி தமது கடமைகளை மேற்கொண்டு வருகின்றனர். இதனால் தபாலகத்திற்குச் செல்வோரும் நீண்ட நேரம் காத்து நிற்க வேண்டிய நிலையையும் காணமுடிகின்றது.

எனவே அத்தியாவசிய தேவை யான மின்சார தேவையைப் பூர்த்தி செய்து கொடுக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோரப்பட்டுள்ளது. (கு)

## உதயநகர் கிராமத்திற்குச் செல்லும் இரு பிரதான வீதிகளும் பாதிப்பு

(அலுவலக செய்தியாளர்)

கனகபுரம் வீதியிலிருந்து தெற்குப்பக்கமாக உதயநகர் மேற்கு கிழக்கு கிராமங்களுக்குச் செல்லும் இரு பிரதான வீதிகளும் மிகவும் சேதமடைந்து கவனிப்பாரற்று காணப்படுகின்றன.

ஸ்ரீமுத்துமாரி அம்பாள் ஆலய வீதி, நாகதம்பிரான் வீதி ஆகிய இரு வீதிகளும் கடந்த பல வருடங்களாக கவனிப்பாரற்றுக் கிடக்கின்றன.

கடந்த காலங்களில் இவ் வீதிகள் முற்றுமுழுதாக மக்கள் பங்களிப்புடன் புனரமைப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

மீளக்குடியமர்வின் பின் நீர் போக்கி அமைக்கப்பட்டு பெயரளவில் குறுகிய தூரம் கிரவல் போடப்பட்டது தற்போது அவ்வீதி குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றது. வீதியின் இருகரைகளும் முறையாக வடிகால்கள் அமைக்கப்பெறாததன் காரணமாக மழைநீர் வழிந்தோட முடியாத நிலையிலுள்ளது.

இவ்வீதிகளைப் புனரமைப்புச் செய்து தரும்படி பல தடவைகள் பலரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டும் இதுவரை ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை. இதுவிடயமாக சம்பந்தப்பட்டவர்கள் பாராமுகமாக இருப்பது கண்டு மக்கள் விசனமடைகின்றனர். மாரி காலத்தில் இவ்வீதிகள் மேலும் பாதிப்படைந்து மக்கள் போக்குவரத்து செய்யமுடியாத நிலைமை தோன்றக்கூடிய ஏதுநிலை காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (சோ)

## ஞானிமடம் கிராமத்தில் சத்துணவுக் கருத்தரங்கு

(பூநகரி)

பூநகரியிலுள்ள ஞானிமடம் கிராமத்தில் சத்துணவு சம்பந்தமான கருத்தரங்கு மாதர் சங்கத்தலைவி திருமதி. ஈழவாணன் தலைமையில் இடம்பெற்றுள்ளது.

அண்மையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் சத்துணவின் அவசியம் பற்றியும் அதனைப்பெறும் வழி முறைகள் பற்றியும் வைத்திய அதிகாரி அ.சுதர்சன் விளக்கமாகக் கூறினார்.

அத்துடன் இந்நிகழ்வில் பிரதேச செயலர் மா. சிறீஸ்கந்தகுமார், கிராம சேவகர் சிவலிங்கம், பிரதேசசபை ஊழியர்கள் எனப்பலர் கலந்து சிறப்பித்தனர். (34)

## செம்பன்குன்று விவசாயிகளுக்கு விவசாய உள்ளீடுகள் வழங்கல்

(பூநகரி)

பூநகரிப்பிரதேச செயலர் பிரிவிலுள்ள பள்ளிக்குடா கிராம சேவகர் பிரிவில் செம்பன்குன்று கிராம விவசாயிகளுக்கு விவசாய உள்ளீடுகள் வழங்கப்பட்டுள்ளன.

கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் செம்பன்குன்று கமக்கார அமைப்புத் தலைவர் தா.கிருஷ்ணசாமி தலைமையில் இந் நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வில் விவசாயப் போதனாசிரியர்களான திருமதி சத்தியா நடராசா, சதீஸ்வரன், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிலைய இணைப்பாளர் சதீஸ் ஆகியோர் கருத்துரைகளை வழங்கினர்.

இங்குள்ள வறிய 25 விவசாயிகளுக்கு மேட்டு நிலப்பயிர் விதைகளும், மரக்கறி விதைகளும், அடிக்கூட்டுப் பசளையான V-I உரமும் வழங்கப்பட்டன. (34)

# இரண்டாம் கட்ட வீடமைப்புத்திட்டத்திற்கு கிராமங்களை தேர்வு செய்யும் பணி ஆரம்பம்

(வலிகாமம்)

**யாழ்.மாவட்டத்தில் உலக வங்கியின் அனுசரணையுடன் இரண்டாம் கட்டமாக நிர்மாணிக்கப்படவுள்ள வீட்டுத் திட்டத்திற்கு கிராமங்களைத் தேர்வு செய்யும் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக யாழ்.செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.**

யாழ்.மாவட்டத்திலுள்ள 14 பிரதேச செயலர் பிரிவுகளிலும் கிராமங்களைத் தேர்வு செய்யும் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த வருடம் உலக வங்கியின் நிதியுதவியுடன் யாழ்.மாவட்டத்தில் 1635 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. அடுத்தவருடம் யாழ். மாவட்டத்தில் 4,000 வீடுகள் நிர்மாணிக்கப்படவிருக்கின்றன என்றும் அதற்கான கிராமங்களைத் தேர்வு செய்யும் பணிகளே தற்சமயம் இடம் பெற்று வருகின்றன எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வருடம் நிர்மாணிக்கப்பட்டு வரும் வீடுகள் யாழ்.மாவட்டத்திலுள்ள 14 பிரதேச செயலர் பிரிவுகளிலும் அடங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது. (37)

# திடீர்மரணவிசாரணை அதிகாரியை நியமிக்கும்படி கோரிக்கை

(வலிகாமம்)

வலிகாமம் மேற்குப் பிரதேச செயலர் பிரிவுக்கு திடீர் மரணவிசாரணை அதிகாரி ஒருவரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென வலி-மேற்குப் பிரதேச மக்கள் சார்பாக, அப்பகுதி பொது அமைப்புக்கள் பலவும் பிரதேச செயலர் சீ.ஏ. மோகன்றாஸிடம் வேண்டுகோள் விடுத்துள்ளன.

கடந்த 20 வருடங்களுக்கு மேலாகவும் வலிமேற்குப் பிரதேசத்தில் வெற்றிடமாக இருந்து வரும் திடீர்மரணவிசாரணை அதிகாரிபதவிக்கு ஒருவரை நியமிப்பதன் மூலம். இப்பகுதி மக்களிடையே ஏற்படும் திடீர் மரணங்களை விசாரிக்க முடியும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

இப்பகுதியில் திடீர் மரணவிசாரணை அதிகாரி ஒருவர் இல்லாததால் திடீர்மரணங்கள் ஏற்படுகின்ற பொழுது பெரும்சிரமங்களை எதிர்நோக்கிவருவது குறிப்பிடத்தக்கது. (37)

# மீளக்குடியமர்ந்தோருக்கு அடிப்படை சுகாதார வசதிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவில் மீளக் குடியமர்ந்துள்ள குடும்பங்களுக்கு அடிப்படைசுகாதார வசதிகளை ஏற்படுத்திக்கொடுப்பதற்கான நடவடிக்கைகளை ஐக்கியநாடுகள் சிறுவர் பாதுகாப்பு நிதியம் மேற்கொண்டு வருகின்றது.

அந்த அடிப்படையில் தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள அளவெட்டி,கட்டுவன் மற்றும் மல்லாகம் ஆகிய பகுதிகளில் மீளக் குடியமர்ந்துள்ள குடும்பங்களுக்கு மலசல கூடவசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க ஐக்கிய நாடுகள் சிறுவர் பாதுகாப்பு நிதியம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அந்த திட்டத்தின்கீழ் இப்பிரதேசத்தில் மீளக் குடியமர்ந்துள்ளோரில் மலசலகூடங்களை அமைப்பதற்கு வசதியற்று வாழ்ந்து வருகின்ற வறுமைக் கோட்டுக்குட்பட்ட குடும்பங்களுக்கு முதற்கட்டமாக 20 மலசலகூடங்களை ஐக்கிய நாடுகள் சிறுவர் பாதுகாப்பு நிதியம் அமைத்து வருகிறது. (33)

# சமுர்த்தி நிவாரணமுத்திரை விநியோகத்தில் முறைகேடு இருந்தால் முறையீடு செய்யலாம்

## -யாழ். அரசசெயலகம் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

சமுர்த்தி நிவாரண முத்திரை விநியோகத்தில் முறைகேடுகள் ஏதாவது இடம்பெற்றிருப்பின் அது தொடர்பாக பாதிக்கப்பட்டமக்கள் மேன் முறையீடு செய்து கொள்ள முடியும் என்று யாழ். அரச செயலகம் அறிவித்துள்ளது.

வறுமைக்கோட்டின் கீழ்வாழ்ந்து வருபவர்களுக்காகவே இந்த சமுர்த்தி நிவாரண முத்திரைத்திட்டம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளபோதும் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள பல குடும்பங்களுக்கு இந்த சமுர்த்தி நிவாரண முத்திரைகள் வழங்கப்படாதுள்ளன.

இதனால் கடும் அதிருப்தியடைந்த மக்கள் தமக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புக்களைச் சுட்டிக்காட்டி யாழ். அரச அதிபர் கணேஷிடம் புகார் தெரிவித்திருந்தனர்.

இதன் விளைவாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அழைத்து இவ்விடயம் தொடர்பாக ஆராய்ந்த அரச அதிபர் சமுர்த்தி நிவாரண முத்திரை விநியோகத்திலுள்ள குறைபாடுகளையும் முறைகேடுகளையும் பரிசீலனை செய்வதற்காக "மீளாய்வுக்குழு" ஒன்றை நியமித்துள்ளார்.

இந்த மீளாய்வுக்குழுவிடம் சமுர்த்தி நிவாரணமுத்திரை விநியோகத்தில் பாதிக்கப்பட்ட மக்கள் அல்லது சகலதகுதிகளும் இருந்தும் அம் முத்திரைகள் கிடைக்கப்பெறாது பாதிக்கப்பட்டவர்கள் தமக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள்பற்றி மேன் முறையீடு செய்யலாம் என்று யாழ்.அரச செயலகம் அறிவித்துள்ளது, (33)

# மல்லாகம் பகுதியில் பார்த்தீனியம் அழிப்பு நடவடிக்கை

சுற்றுச்சூழல் பாதுகாப்பு முன்னோடி தினத்தினை முன்னிட்டு யாழ். மல்லாகம் பகுதியில் பார்த்தீனியம் விசச்செடியினை அழிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் யாழ்.வலிகாமம் பகுதியில் பார்த்தீனியம் விசச்செடியின் பரம்பல் அதிகமாகவுள்ள மல்லாகம் பிரதேசத்தில் அவற்றை ஒழிப்பதற்கான களைநாசினிகளை விசிறும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மேற்படி பகுதியில் அதிகளவில் பரவலடைந்து காணப்படும் பார்த்தீனியம் விசச்செடியின் தாக்கத்தினால் இப்பகுதி விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலைமைகளைக் கவனத்தில் கொண்டும் இப்பகுதி சூழல் சமநிலை பேணப்பட வேண்டியதன் அவசியத்தையும் கவனத்தில் கொண்டுமே இக்களை நாசினிகளை விசிறும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தமிழீழ சூழல் நல்லாட்சி ஆணையத்தின் அழைப்பினை ஏற்றே இப் பார்த்தீனிய விஷச்செடியை அழிப்பதற்கான நடவடிக்கைகள் இவ்வாரம் முதல் நடைபெற்றுவருகின்றன. (33)

# மாணவர்களுக்கு அன்பளிப்பு

(வலிகாமம்)

யாழ்.காரைநகர்ப்பகுதியில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு யாழ். மாவட்ட கிறிஸ்தவ ஒன்றியம் ஒரு தொகுதிஅன்பளிப்புப் பொருட்களை வழங்கியுள்ளது.

இந்த அன்பளிப்புப் பொருட்கள் சமீபத்தில் காரைநகர் மத்திய அம்பாள் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினரூடாக வழங்கப்பட்டது.

ஒரு தொகுதி அப்பியாசப் புத்தகங்களும் ஒரு தொகுதி பாதணிகளும் அன்பளிப்புப் பொருட்களாக வழங்கப்பட்டன. சுமார் 275 மாணவர்களுக்கு இப்பொருட்கள் வழங்கப்பட்டதாக காரைநகர் அம்பாள் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (37)

# அபராதம் விதிப்பு

(யாழ்ப்பாணம்)

கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் கோடாவினை வைத்திருந்த குற்றத்துக்காக துன்னாலையைச் சேர்ந்த நபர் ஒருவருக்கு பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம் 50 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளது,

இவர் மீது பருத்தித்துறை மாவட்ட நீதவான் க.அரியநாயகம் மேற்கொண்ட விசாரணைகளில் அவர் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டதைத் தொடர்ந்தே பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம் அவருக்கு [illegible] ஆயிரம் ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தது.

அத்துடன் குற்றவாளி 50 ஆயிரம் ரூபா அபராதப்பணத்தை செலுத்தத் தவறின் சிறைத்தண்டனையை அனுபவிக்க வேண்டுமென்றும் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. (33)

# கலாச்சார விழுமியங்களைப் பேண கலாச்சாரப் பேரவை நிறுவ ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தின் தமிழ் கலாச்சார விழுமியங்களை பேணிப் பாதுகாக்கும் நோக்குடன் யாழ். மாவட்டத்துக்கான கலாச்சாரப் பேரவை ஒன்று நிறுவப்படவுள்ளது.

இப் பேரவையை நிறுவுவது சம்பந்தமான முக்கிய கூட்டம் ஒன்று எதிர்வரும் 23ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் யாழ்.அரச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த கலைஞர்கள், ஆர்வலர்கள் எனப்பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதில் முக்கியமாக யாழ்.மாவட்ட கலாச்சாரப் பேரவைக்கான உறுப்பினர் தெரிவு, புதிய அங்கத்தவர்களைத் தெரிவு செய்வதற்கான தகுதிகள் பற்றிய ஆராய்வு, புதிய அங்கத்தவர்களை நியமித்தல் என்பன இடம் பெறும்.இதைவிட யாழ்.மாவட்ட கலாச்சாரப் பேரவையின் எதிர்காலச் செயற்பாடுகள், அதற்கான திட்ட நடவடிக்கைகள் என்பன குறித்தும் பிரஸ்தாபிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (33)

# வலி.மேற்கு பிரதேச செயலகத்தில் இன்று சிறுவர் முதியோர் தின விழா

(வலிகாமம்)

வலிகாமம் மேற்குப் பிரதேச செயலகம் நடாத்தும் சிறுவர், முதியோர் தின விழா இன்று காலை பத்து மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வலிகாமம் மேற்குப் பிரதேச செயலர் கீ.ஏ.மோகன்றாஸ் தலைமையில் இந்நிகழ்வு இடம் பெறவுள்ளது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு-கிழக்கு மாகாண பொது நிர்வாக முன்னாள் செயலாளர் திருமதி. கமலா சிவசிதம்பரம் கலந்து கொள்கின்றார்.

சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக புவியியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஏ.அன்ரனிராஜா கலந்துகொள்கிறார். கௌரவ விருந்தினராக யாழ். மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணிப்பாளர் சு.ஜெயராஜ் கலந்து கொள்கின்றார்.

இதில் வலி.மேற்குப் பிரிவிலுள்ள 50 முதியோர்களும், 46 சிறுவர்களும், 25 அங்கவீனர்களும் பரிசுப் பொருட்கள் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர். மேலும் இவ்விழா தொடர்பாக நடத்தப்பட்டபோட்டிகளில் வெற்றியீட்டிய 54மாணவர்களுக்குப் பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. (37)

# சாரதி அனுமதிப்பத்திரம் பெற விரைவில் புதிய நடைமுறை

வாகனங்களை செலுத்துவதற்கான சாரதிஅனுமதிப்பத்திரங்களுக்காக விண்ணப்பிப்பவர்கள் எதிர்காலத்தில் கடுமையான நடைமுறைகளை சந்திக்க வேண்டியிருக்கும் எனவும் தமது உடற் தகுதியினை நிரூபிக்க வேண்டியிருக்கும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

விபத்துக்களை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளின் ஒரு பகுதியாகவே புதிய கடுமையான நடைமுறைகள் அறிமுகமாகவுள்ளன தற்போது உள்ள நடைமுறையின்படி கனரக வாகனங்களை செலுத்துவதற்கான சாரதி அனுமதிப் பத்திரத்திற்கு விண்ணப்பிப்பவர்கள் மாத்திரம் தமது உடற்தகுதியினை நிரூபிக்க வேண்டும். ஏனையவர்கள் தனியான் மருந்துவர்களின் சான்றிதழ்கள் மூலம் தமது உடற்தகுதியினை நிரூபிக்கலாம். ஆனால்இனிமேல் சாதாரணமான வாகனச்சாரதிகளுக்கான அனுமதிப்பத்திரம் பெறுபவர்களும் தமது உடற் தகுதியினை நிரூபிக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்படுகின்றது

# வசாவிளானில் மீளக்குடியமர்ந்தோருக்கு சுயதொழில் முயற்சி கடனுதவி

(யாழ்ப்பாணம்)

யாழ்.வசாவிளான் கிழக்கில் மீளக் குடியமர்ந்துள்ள குடும்பங்களின் சுயதொழில் முயற்சிகளை மேம்படுத்தும் நோக்கில் நிகொட் திட்டத்தின் கீழ் சுயதொழில் மேம்பாட்டுக் கடனுதவிகள் வழங்கப்படவுள்ளன.

கடந்தகால இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்த வசாவிளான் கிழக்குப் பகுதி மக்கள் தற்பொழுது அங்கு படிப்படியாக மீளக்குடியமரத் தொடங்கியுள்ளனர்.

இவ்வாறு மீளக்குடியமர்ந்து வருவோரில் பெரும்பாலானவர்கள் வறுமையினால் பாதிக்கப்பட்டு நிறுவன உதவிகளையே நம்பி வாழ்பவர்களாகக் காணப்படுகின்றனர்.

இவ்வாறு வறுமைக்கோட்டின் கீழ் வாழ்ந்து வரும் குடும்பங்களை இனம் கண்டு அவர்களின் தரத்துக்கு ஏற்ற பொருளாதார மேம்பாட்டை ஏற்படுத்துவதற்கு ஏதுவாக இங்கு வாழும் மக்களிடையே சுய தொழில் முயற்சிகளை ஊக்குவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இச்சுயதொழில் மேம்பாட்டு நடவடிக்கையின் ஓர் அங்கமாகவே சுயதொழில் முயற்சியாளர்களுக்கான கடன்திட்டம் ஒன்று நிகொட் திட்டத்தின் கீழ் அமுல் செய்யப்படவுள்ளது. (33)

# மகிந்த நாட்டை மீண்டும் யுத்தம் நோக்கி இழுத்துச் செல்கிறார்!

2004 ஆண்டு அரசு பதவி ஏற்கும் பொழுது சமாதானத்தைப்பற்றி இந்நாட்டு மக்கள் நன்கு உணர்ந்திருந்தனர். இதற்கு முன்னதாக ஐக்கிய தேசியக் கட்சி ஏற்படுத்தி கொண்டுள்ள சமாதான ஒப்பந்தம் பேச்சு வார்த்தைகள் மூலமாகத் தீர்ப்பதே ஆகும். ஐக்கிய இலங்கைக்குள் அதிகாரப் பரவலாக்கல் மூலம் இனப்பிரச்சினை தீர்வுக்கு முடிவு காண்பதை மக்கள் ஒப்புக் கொண்டுள்ளனர்.

அரசாங்கம் பலவீனமடைந்து சிறுபான்மையாக இருந்தாலும் சமாதான தீர்வினை இவர்கள் வரவேற்றுள்ளனர். நாட்டில் ஏற்பட்டுள்ள போரினை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் மூலமாக ஒரு முடிவிற்கு கொண்டுவர முடியுமென, நோர்வே சமாதான ஏற்பாட்டாளார்களை இந்நாட்டின் சமூகம் ஏற்றுக்கொண்டது.

நோர்வே அரசின் உதவியுடன் ஆறு சுற்றுப் பேச்சு வார்த்தைகளை ஐக்கிய தேசியக்கட்சி அரசு நடத்தி 45,000 கோடிருபாவை நாட்டின்அபிவிருத்திக்கு பெற்றுக் கொண்டது அக்கட்சிக்கு மாபெரும் வெற்றியாகும்.

ஐக்கிய தேசியக்கட்சி சமாதான பேச்சு வார்த்தைகளை நடத்தி கொண்டிருக்கும் பொழுது சர்வதேச பாதுகாப்பு வலயம் ஒன்றை ஏற்படுத்தியது. அப்பொழுது விடுதலைப்புலிகள் இயக்கம் வடகிழக்கு அபிவிருத்திக்கு ஈடுபடுத்தப் போகும் நபர்களின் பெயர்ப் பட்டியலை சமாதான மேசையில் முன் வைத்தது. புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் எந்த மாற்றங்களும் ஏற்படவில்லை.

போர் நிறுத்த ஒப்பந்தம் அப்படியே கடைப்பிடிக்கப்பட்டது. இவைகளை எவரும் விமர்சனம் செய்யவில்லை. போர் நிறுத்தம் மீறப்பட்டு மீண்டும் ஒரு யுத்தத்தை ஐக்கிய தேசியக் கட்சி ஏற்படுத்தவிரும்பவில்லை. சிலசுதந்திரக்கட்சியின் பாராளுமன்ற, உறுப்பினர்கள் இது சம்பந்தமாக கோசம் எழுப்பினர்.

அந்நேரத்தில் ஜே.வி.பி.யினரும் ஜாதிக ஹெல உறுமய கட்சியும் போர் நிறுத்த ஒப்பந்தத்திற்கு எதிராக வீதிகளில் இறங்கி போராட்டம் நடத்தினர்.

ஐக்கிய தேசியக் கட்சியினர் நாட்டை பிரிக்கப் போகிறார்கள். நாட்டை தமிழர்களுக்கு தாரை வார்த்து விட்டார்கள் எனக் கூறிக்கொண்டு ஜே.வி.பியும் ஜாதிக ஹெல உறுமய கட்சியும் சமாதானத்திற்கு எதிராகப் போராட்டம் நடத்தினார்கள்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் ஐக்கிய தேசியக்கட்சியும் சமாதான பேச்சு வார்த்தைகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. பொறுப்புடன் நடந்து கொண்டனர். எதிர்ப்புத் தெரிவித்தால் சிறுபான்மை தமிழ் மக்களின் எதிர்ப்புக்களை சம்பாதிக்க நேரிடும் என்பதை உணர்ந்தனர்.

இத்தருணத்தில் பேச்சுவார்த்தைகளுக்கு எதிரானவர்களை தமது பக்கம் இழுத்துக்கொள்வதற்கான உபாயங்களை கையாண்டனர்.

இதற்காக பௌத்த குருமார்கள், சட்டத்தரணிகள்,கல்விமான்கள். ஓய்வு பெற்ற அரச ஊழியர்கள், வணிகர்கள், தனவந்தர்கள், பல்கலைக்கழக பேராசிரியர்கள் போன்றவர்களின் கருத்துக்களை கேட்டறிந்தனர்.

இவர்கள்முன் வைத்த கருத்துக்கள் யாவும் ஒன்றுக்கொன்று முரண்பாடாக காணப்பட்டபடியால் சமாதான பேச்சு வார்த்தைகளில் பெரும் பின்னடைவு ஏற்பட்டதுடன் சிக்கலையும் ஏற்படுத்தியது.

இந்நிலையில் நாட்டில் யுத்தம் ஏற்படுமானால் அபிவிருத்தி முற்றாக ஸ்தம்பிதமடையும். இதைப் பயன்படுத்தி தனதுகட்சியையும் கொள்கைகளையும் முன்னெடுத்து செல்ல முடியும், நாட்டிலுள்ள இரண்டு பிரதான கட்சிகளுக்கும் இப்பிரச்சினையைத் தீர்க்க முடியா தென மக்களிடம் கூறி இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு தமது கட்சிக்கு ஒரு சந்தர்ப்பத்தை வழங்குங்கள் என மக்களிடம் வேண்டுகோள் ஒன்றை ஜே.வி.பி. யினர் விடுக்கலாம். இதனால் இந்நாட்டின் மூன்றாவது பெரும் கட்சியாக உருவெடுக்க முடியும். ஆகையால் சிறிலங்கா சுதந்திரக்கட்சி, ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கைகள் சம்பந்தமாக வெறுப்புற்றவர்களை தமது கட்சிகளில் இணைத்துக் கொண்டு கட்சியை பலப்படுத்துவதே இவர்களின் தற்போதைய நோக்கமாகவுள்ளது. இது இவர்களின் கனவாகும்.

இரண்டு பெரும் கட்சிகள் தற்பொழுது பலப்பரீட்சையில் ஈடுபட்டு கொண்டிருக்கின்ற காரணத்தால் ஜே.வி.பி.யின் அரசியல் பயணம் நீடிக்கும். ஐக்கிய தேசியக் கட்சி-சிறிலங்கா சுதந்திரக்கட்சி இந்த இரண்டு கட்சிகளில் ஒன்றை இல்லாதொழிப்பதே ஜே.வி.பி.யின் திட்டமாகும்.

தேசியப் பிரச்சினை சம்பந்தமாக ஐக்கிய தேசியக் கட்சி கடைபிடிக்கும் கொள்கைகளால் ஜே.வி.பியினருக்கு ஐக்கிய தேசியகட்சிக்குள் ஊடுருவ முடியாது. அது இலகுவான காரியமாக அமையாது என்பது ஜே.வி.பியினருக்கு நன்றாகத் தெரியும். ஆகையால் தனது அரசியல் இலக்கை அடைவதற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சியை தேர்தெடுத்து மகிந்தராஜபக்ஷவை சனாதிபதி வேட்பாளராக்கினால் அவரின் மூலமாக தமது இலக்கை அடைய முடியும் என ஜே.வி.பி. திட்டம் தீட்டியுள்ளது.

ஜே.வி.பி. தயாரித்த ஒப்பந்தத்தில் மகிந்தராஜபக்ஷ கையொப்பம் இட்டது சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவி சந்திரிகாவினால் ஜீரணிக்க முடியாமல் போயிற்று, ஆனால் ஜே.வி.பி.யும் ஜாதிக ஹெல உறுமய கட்சியும் மகிந்த ராஜபக்ஷவை தங்களது வலையில் சிக்க வைத்துள்ளன.

பிரதமர் மகிந்தராஜபக்ஷவுக்கும் சனாதிபதி சந்திரிகாவுக்கும் இடையில் பல பிணக்குகள் ஏற்பட்டுஅது தற்பொழுது வலுவடைந்துள்ளது.

ஒரு கொடி எந்தப் பக்கம் படருகிறதோ அந்தப்பக்கம் தான் பந்தல் போடவேண்டும். அரசியல் தந்திரத்தை கையாளும் பொழுது நிதானம் அவசியம், இந்த நிதானத்தை கடைப்பிடித்து மகிந்தராஜபக்ஷவை தனது பிடிக்குள் ஜே.வி.பி இறுக்கிவைத்துள்ளது.

ஹொரகொல்ல மாளிகையின் அனுசரணை தனக்குக் கிடைக்காது என உணர்ந்த பிரதமர் தனக்கு சிறுபான்மை மக்களின் வாக்குகளும்கிடைக்காது என நம்பி தென்பகுதி அரசியல் கட்சிகளுடன் இணைந்து கொண்டார்.

இது அவரின் அரசியல் பலவீனம் எனக் கூறமுடியாது. ஜாதிக ஹெலஉறுமய, ஜே.வி.பி பிரதமருடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தினால் இந்நாட்டின் சமாதான ஒப்பந்தத்தில் பெரும் சிக்கலை ஏற்படுத்தியுள்ளது.

சுனாமி ஒப்பந்தத்தை சனாதிபதி மேற்கொண்ட பொழுது பிரதமர் இதில் கலந்துகொள்ளவில்லை. இந்த ஒப்பந்தத்தில் மீள் அபிவிருத்தியின் செயலாளர் நாயகம் கையொப்பம் இட்டுள்ளார். இதைஜே.வி.பியும் ஜாதிக ஹெலஉறுமய கட்சியும் விமர்சனம் செய்தன.

இந்த விமர்சனத்தைப் பற்றி நாட்டின் பிரதமர் என்ற முறையில் மகிந்த ராஜபக்ஷ எந்தக் கருத்துக்களையும் தெரிவிக்கவில்லை. சுனாமி புனர்நிர்மாண ஒப்பந்தம் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின்மத்திய குழுவினாலும், பிரதமர் காரியாலயத்தின் செயற்குழுவினாலும் அங்கீகரிக்கப்பட்ட பின் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

பின் பாராளுமன்றத்தின் அங்கீகாரமும் கிடைத்தது. இந்த ஒப்பந்தத்தை பிரதமரால் மீற முடியாது. ஆகையால், இந்த ஒப்பந்தத்திற்கு எதிராக ஜே.வி.பி யுடன் ஏன்ஒப்பந்தம் செய்து கொண்டார். சமாதான பேச்சுவார்த்தை சம்பந்தமாக ஜே.வி.பி முன்வைத்துள்ள நிபந்தனை மிக முக்கியமானதாகும். பிரதமரும் ஜே.வி.பியும் சமாதான பேச்சுவார்த்தைகளுக்கு சகலகட்சிகளையும் இணைத்துக்கொண்டு பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டும் என்பதே அவர்களின் நிலைப்பாடாகும்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், ஐக்கியதேசியக் கட்சியும் தங்களது ஆட்சிக்காலத்தின் பொழுது எந்த அரசியல் கட்சிகளையும் பேச்சு வார்த்தைகளில் இணைத்துக்கொள்ளவில்லை. ஏனைய கட்சிகள் சமாதானப் பேச்சு வார்த்தைகளில் ஈடுபடுவதை விடுதலைப்புலிகள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்பது இந்த இரு கட்சிகளுக்கும் நன்குதெரியும்.

இவை எல்லாம் தெரிந்து கொண்ட பிரதமர் ராஜபக்ஷ ஏன் ஜே.வி.பியின் நிபந்தனைகளுக்கு கையொப்பம் இட்டார். மீண்டும் ஒரு யுத்தத்திற்கு விடுதலைப்புலிகளை இழுத்துக்கொள்ள வேண்டும் என்பதே பிரதமரின் நிலைப்பாடாகும். ஆகவேதான் ஜே.வி.பியின் நிபந்தனைகளுக்கு பிரதமர் கையொப்பம் இட்டுள்ளார்.

ஐக்கிய இலங்கை என்பதை சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியும் ஏற்றுக்கொண்ட விடயம். ஐக்கிய இலங்கைக்குள் அதிகாரப் பரவலாக்கல் என்பதை சனாதிபதி பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த பொழுது அதை தற்போதைய பிரதமர் ஏற்றுக் கொண்டு மௌனமாக இருந்தார்.


இன்று இவைகளை எல்லாம் மறந்து மீண்டும் ஒற்றையாட்சியின் கீழ் அதிகாரப் பரவலாக்கல் என்ற ஜே.வி.பி-ஜாதிக (ஹெல) உறுமய கட்சியின் நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டபடியால் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ மீண்டும் இந்த நாட்டை ஒரு யுத்த சூழ்நிலைக்குத் தள்ளிவிட்டார்.

விடுதலைப்புலிகளும் ஐக்கிய தேசியக் கட்சியும் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தை முற்றாக பிரதமர் நிராகரித்துள்ளார். புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள பாதுகாப்பு ஒப்பந்தத்தைமுற்றாக மாற்றும் திட்டத்தையே பிரதமர் ஏற்றுக் கொண்டுள்ளார். இதனால் புரிந்துணர்வு ஒப்பந்தம் பிரதமர் ராஜபக்ஷவினால் மாற்றப்படும் என்பதை உறுதியாக கூற முடியும். இதனால் ஏற்படும் விபரீதங்கள் என்ன என்பதை இவர்களால் கூற முடியாது. சர்வதேச அனுமதியுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மாற்ற முடியும் இல்லாவிடில் மாற்றங்கள் செய்யமுடியாது. அப்படி பிரதமர் ராஜபக்ஷ புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மாற்றினால் நாட்டில் யுத்தம் ஏற்படுவதை தவிர்க்க முடியாது. அத்துடன் நோர்வே நாட்டை இலங்கையில் இருந்து வெளியேற்ற வேண்டும் என ஜே.வி.பி பிரதமர் ராஜபக்ஷ ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ளது. ஆனால் சனாதிபதியும் இலங்கை சமாதான செயலகமும் சமாதானப் பேச்சுக்களை முன்னெடுத்து செல்ல வேண்டும் எனவும் அதில் எந்த மாற்றங்களையும் செய்ய முடியாதெனவும் கூறிவருகின்றனர்.

ஆகையினால் நோர்வே ஏற்பாட்டாளர்களை இவர்களால் விரட்டி அடிக்க முடியுமா? நோர்வே நாட்டவரை இவர்களால் விரட்டி அடிக்கமுடியாது. இந் நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்பட வேண்டுமானால் சகலசிங்களக் கட்சிகளும் ஒன்றிணைவது மிக அவசியம். இப்பிரச்சினையை பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்த்துக் கொள்ளாவிட்டால் இனவாதிகள் மற்றும் மதவாதிகளினால் இந்நாடு பெரும் அழிவை சம்பாதித்துக்கொள்வதை எவராலும் தடுத்து நிறுத்தமுடியாது.


மகிந்தராஜபக்ஷ


ரணில்


சோமவன்ச

லங்காதீப சிங்களநாளிதழ்
முன்னைய பாதுகாப்பு செயலாளர்
ஒஸ்டின் பர்னாந்து
மொழியாக்கம். அ.சக்திவேல்.

# நெல் சந்தைப்படுத்தலில் மாற்றுவழி தேடல் அவசியம்

கம்ஷிகா சுகுமார்
சிவறஞ்சன்

**இன்று** வன்னிப்பெருநிலப்பரப்பில் விவசாயிகள் எதிர்நோக்கும் பாரிய பிரச்சினைகளில் நெல் சந்தைப்படுத்தல் முக்கிய இடத்தைப் பிடித்துள்ளது. நெல் அறுவடை முடிந்த பின்பும் விற்பனை செய்ய முடியாத நிலையில் வீடுகளில் நெல்மூடைகள் தேங்கிக் கிடக்கின்றன.

இதற்கு பல்வேறு விடயங்கள் முக்கிய காரணிகளாக அமைந்துள்ளன. அந்தப்பிரச்சினைகளை இனங்கண்டு அதற்குத் தீர்வு காண்பதன் மூலமே நெல் சந்தைப்படுத்தலை இலகுபடுத்துவதுடன் விவசாயிகளையும் மேம்பாடடையச் செய்ய முடியும்.

நெல் சந்தைப்படுத்தலில் ஏற்பட்டுள்ள தற்காலிக நெருக்கடி காரணமாக விவசாயிகள் தமது அடுத்த கட்ட நகர்வு குறித்து பல கேள்விகளை எழுப்பியவண்ண முள்ளனர்.

இந்தப்பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வாகக் கூடிய வழிவகைகள் குறித்தும், எடுக்கப்பட்டு வருகின்ற நடவடிக்கைகள் குறித்தும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன துணைப்பொறுப்பாளர் சின்னண்ணை விளக்கமாக எடுத்துக் கூறுகின்றார்.

வன்னி நிலப்பரப்பை பொறுத்த வரையில் நெற்செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் நெல் சந்தைப் படுத்தும் விடயத்தில் பெரிதும் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

இரண்டு வகையான பிரச்சினைகள் இருக்கின்றன. ஒன்று சந்தைப்படுத்தல் வசதி போதுமானதாக இல்லாமை. மற்றையது, நெற் பயிர்ச்செய்கை மேற்கொள்ளும் விவசாயிகளின் நடைமுறைப்பிரச்சினை. இதற்குத் தீர்வுகாணும் ஒரு வழி வகையாக பாரிய அரிசிஆலை ஒன்று கிளிநொச்சியில் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது. இதன் மூலம் நெல் சந்தைப்படுத்தலில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளை ஓரளவுக்கு தீர்க்க முடியும்.

**தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன துணைப்பொறுப்பாளர் சின்னண்ணைநெல் உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்துதல் குறித்து வழங்கிய கருத்துக்கள்.**

இன்று சகலரதும் நுகர்வில் பெரிய மாற்றங்கள் ஏற்பட்டுவிட்டன. வன்னிப்பகுதியில் உள்ள ஒரு பகுதியினரும், யாழ். குடாநாட்டிலுள்ள ஒரு பகுதியினருமே சிவப்பு அரிசியினைப் பயன்படுத்துகின்றனர்.

ஏனைய பிரதேசங்கள் மற்றும் நாடுகளில் இந்த சிவப்பு அரிசி நுகர்வு அருகிப்போய்விட்டது. இதனால் .இங்குள்ள உற்பத்தியாளர்கள் சந்தையில்கேள்வி நிலையிலுள்ள அரிசியினை உற்பத்தி செய்ய வேண்டிய கட்டாய தேவை ஏற்பட்டுள்ளது. அவ்வாறு கேள்வி அதிகரித்துள்ள நெல்லை உற்பத்தி செய்வதன் மூலமே சந்தைப்படுத்தலை இலகுபடுத்த முடியும். நுகர்வுக்கு ஏற்ற வகையிலேயே உற்பத்தி யினைமேற்கொள்ள வேண்டும்.

தற்போது நெல்லை சந்தைப்படுத்துவதற்கான வழிகள் திறந்துவிடப்பட்டும் சந்தைப்படுத்தல் மந்தகதியில் உள்ளமைக்கு இதுவேஅடிப்படைக் காரணமாகின்றது.

இதனால் வன்னி மற்றும் குடாநாட்டுப் பகுதிகளில் சிவப்பு அரிசியின் நுகர்வு எவ்வளவுக்கு உள்ளது என்பது தொடர்பான ஆய்வொன்றை மேற்கொண்டுள்ளோம். அந்த தேவைக்கேற்ற வகையில் சிவப்பு அரிசி உற்பத்தியினை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வெளிச்சந்தைக்கு ஏற்றவகையில் பொன்னி, சம்பா போன்ற நெல் உற்பத்திகளை மேற்கொள்வதன் மூலமே சந்தைப்படுத்தலை இலகுபடுத்தமுடியும்.

இதேவேளை நெல்லாகச் சந்தைப்படுத்த வேண்டிய தேவையும் இல்லை.இன்றைய நவீன முறைக்கு ஏற்ற வகையில் அரிசி ஆலை ஒன்றினைஉருவாக்கி இதன் மூலம் நெல்லை கொள்வனவுசெய்துஅதனை அரிசியாக மாற்றி விற்பனைக்கு விடமுடியும்.

தற்போது நுகர்வோரின் எண்ணங்கள் மாற்ற மடைந்துள்ளன. அரிசியினைமூடையாகவோ அல்லது சிறிய அளவுகளில் நிறுத்துக் கொள்வனவு செய்வதையோ விரும்பவில்லை.

அரிசியினை சிறிய பைக்கற்றுக்களில் பொதி செய்த நிலையிலேயே கொள்வனவு செய்ய விரும்புகின்றனர். ஏனெனில் சந்தைகளில் பொதி செய்யப்பட்ட அரிசிக்கே கேள்வி அதிகரித்துக் காணப்படுகின்றது.

இதற்கமைவாக அரிசிஆலை மூலம் கொள்வனவு செய்யப்படும் நெல்லை அரிசியாக்கி அதனை தேவையான அளவுகளில் பைகளில்பொதி செய்து சந்தைக்கு விடவேண்டியுள்ளது.

இதன் மூலம் நெல் சந்தைப்படுத்தலை இலகுபடுத்த முடிவதுடன், மேலும் தொழில்வாய்ப்புக்களையும் அதிகரிக்க முடியும்.

இப்போதும்கூட இந்தவகையானஅரிசிகள் தென்னிலங்கையில் இருந்தே எமது பகுதிகளுக்கு கொண்டு வரப்படுகின்றன. எமதுநெல்லைச் சந்தைப்படுத்துவதில் நெருக்கடிஎதிர் நோக்கப்படும் அதேவேளை எங்கோ ஒருபகுதியில் உற்பத்தியாகும் அரிசிக்கான சந்தை வாய்ப்பு எங்களுடைய பகுதிகளில் ஏற்பட்டுள்ளது. இந்த நிலைமை மாற்றப்பட வேண்டும். இதன் நோக்கமே இந்தஅரிசி ஆலை



நிர்மாணிப்பு பணியாகும்.

பலகோடிரூபா செலவில் கிளிநொச்சி நகரப்பகுதியில் இந்த அரிசி ஆலை நிர்மாணிக்கப்பட்டுவருகிறது.

வன்னியில் நெற்செய்கை உற்பத்தி படிப்படியாக குறைந்து செல்கின்றது. இந்த நிலைமையானது இந்த அரிசி ஆலை நிர்மாணிப்பின் மூலம் மாற்றமடையும் என் எதிர்பார்க்கின்றோம்.

நெற்பயிர்ச்செய்கையானது திட்டமிட்டு மேற்கொள்ளப்பட வேண்டும். சரியான காலத்திற்கு பயிர்ச்செய்கையினை மேற்கொண்டு அறுவடையில் ஈடுபடும் விவசாயிகள் பாதிப்புக்களை எதிர்கொள்வதில்லை. சரியான கா[illegible]எல்லைகளைப் பின்பற்றாமல் நெற் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளே பாரிய நட்டங்களை எதிர் கொண்டுள்ளமை கடந்த கால அனுபவங்களின் மூலம் உணரப்பட்டுள்ளது.

காலஅட்டவணைகளை கடைப்பிடிக்காத விவசாயி களே




பயிர்களில் நோய்த் தாக்கம், மற்றும் நீர் விநியோக பிரச்சினைகளை எதிர்கொண்டு பாரிய நெருக்கடிகளை சந்திக்கின்றனர். இந்த விடயத்தில் விவசாயிகள் ஒத்துழைப்பு வழங்க வேண்டியது அவர்களின் கடமையாகும்.

போர் நடைபெற்றுக் கொண்டிருந்த காலப் பகுதியில் அதாவது செயற்கை பசளை வராத வேளையில் இயற்கை உரங்களை உற்பத்தி செய்து அதனை பயன்படுத்தி கிடைத்த அறுவடையினை விவசாயிகள் தற்போதைய இந்த சமாதான காலத்தில் செயற்கை உரங்களையும கிருமி நாசினிகளையும் ப்யன்படுத்துவதன் மூலம் பெறமுடியவில்லை. இது அண்மைய அவதானிப்புக்களின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

இதனால் விவசாயிகள் முடிந்தளவு இயற்கைப் பசளைகளை பயன்படுத்தி விவசாயத்தை மேம்படுத்த முன்வரவேண்டும்.

தற்போதும் கூட விவசாயிகள் பாதிக்கப்படக் கூடாது என்பதற்காக அறு!வடைக்காலங்களில் நெல்லுக்கான நிர்ணய




விலை தீர்மானிக்கப்படுகின்றது.

ஆனாலும் நெல்லை கொள்வனவு செய்யும் அளவு அல்லது கொள்வனவாளர்கள் இல்லாமையானது விவசாயிகளுக்கு பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றது. இந்த நிலைமை மாற்றப்படவேண்டும் என்பதனையும் நோக்காகக் கொண்டே இந்த அரிசி ஆலை உருவாக்கப்படுகின்றது.

நெல்உற்பத்தியாளர்களை ஊக்குவிப்பதற்காக பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அந்தந்தக்காலத்திற்கு ஏற்ற வகையில் விவசாயிகளுக்கான அறிவுறுத்தல்கள் வழங்கப்படுகின்றன. கிராமம் கிராமமாகச் சென்று விவ்சாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை ஆராய்ந்து அதனைத் தீர்ப்பதற்கான வழிவகைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அதேபோன்று நீர்ப்பாசனக் குளங்கள், வாய்க்கால்கள் என்பனவற்றைப் புனரமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. பயன் பாடற்றுக்கிடந்த குளங்கள் பல இனங்காணப்பட்டு புனரமைக்கப்பட்டு அங்கு விவசாயச்செய்கை மேற்கொள்ளப்படுகின்றது.

மற்றும் விவசாயிகளுக்கு தேவையான நவீன இயந்திரசாதனவசதிகளை ஏற்படுத்திக்கொடுத்துள்ளோம். இதன்மூலம் விவசாயத்தில். எதிர்நோக்கப்படும் தொழிலாளர் பிரச்சினைக்கு ஓரளவு தீர்வு காணமுடிகின்றது. விவசாயிகளுக்கான கடன்வசதிகள் கிராமியஅபிவிருத்தி வங்கியினூடாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சுனாமிபாதிப்பும் தற்போது மேற்கொள்ளப்படும் சகல வீதிஅபிவிருத்திப் பணிகளாலும் தொழிலாளருக்கு பெரும் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இதன்தாக்கத்தால் விவசாயிகள் பாதிக்கப்படாமல் இருப்பதற்காக நவீன விவசாயசாதனங்கள் கொண்டுவரப்பட்டு அவை புழக்கத்தில் விடப்பட்டுள்ளன.

விவசாய உபகரணங்களை கொள்வனவு செய்ய விரும்பும் விவசாயிகளுக்கு தேவையான வசதிகள் ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டுள்ளன. அவர்களுக்கு தேவையான பாரிய அளவிலான கடன்வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன வரிவிலக்குகள் வழங்கப்பட்டுள்ளன.

ஆகவே இந்த அரிசிஆலை நிர்மாணிப்பின் மூலம் வன்னிப்பிரதேசத்தில் நெற்செய்கை உற்பத்தியை அதிகரிக்க முடியும் என எதிர்பார்க்கின்றோம். இதன் மூலம் விவசாயிகளின் பொருளாதாரம் மேம்பட்டநிலைக்கு கொண்டு வரப்படும் என நம்ப முடியும்.

## கொத்தணி வாக்குச் சாவடிகளில் கெடுபிடியின்றி வாக்களிக்க இராணுவம் உறுதி

(மட்டக்களப்பு)

சிறிலங்கா சனாதிபதித் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள விடுதலைப்புலிகளின் நிர்வாகப்பகுதி வாக்காளர்கள் எவ்வித கெடுபிடிகளுமின்றி இராணுவ சோதனைச் சாவடிகள் ஊடாக இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதிகளிலுள்ள கொத்தணி வாக்குச் சாவடிகளுக்குச் சென்று வாக்களிக்க முடியும் என்று இராணுவத் தரப்பினரால் நேற்று முன்தினம் உத்தரவாதம்அளிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள நான்கு இராணுவப்பண்டப் பிரிவுகளின் கட்டளை அதிகாரிகளுடன் மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலகரான அரசாங்க அதிபர் எஸ்.புண்ணியமூர்த்தி மாவட்டச் செயலகத்தில் இது தொடர்பான ஆலோசனைக் கூட்டத்தை நடத்தினார். இக்கூட்டத்தின் முடிவில் இராணுவத்தின் உத்தரவாதம் எழுத்து மூலமாக கைச்சாத்திடப்பட்டது

மட்டக்களப்பு மாவட்டத்தில் எதிர்வரும் தேர்தலில் மூன்று இலட்சத்து 18 ஆயிரத்து 728 வாக்காளர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளார்கள். இதற்கென 354 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

# நாட்டின் பொருளாதார பின்னடைவுக்கு ஒழுங்கமைக்கப்படாத பொருளாதாரமே காரணம்

## திறைசேரி செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் ஒழுங்கமைக்கப்பட்ட பொருளாதார முறையொன்று காணப்படாமையாலேயே நாடு அபிவிருத்தியில் பின் தங்கியிருப்பதாக திறைசேரி செயலாளர் டாக்டர் பி.பி ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

இலங்கை பட்டயக் கணக்காய்வாளர் சங்கம் ஏற்பாடு செய்திருந்த வைபவமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டின் அபிவிருத்திக்கு அரச மற்றம் தனியார் வங்கிகள் குறிப்பிட்டளவு பங்காற்றி வருகின்றன. அரசாங்கத்தின் பொருளாதார இலக்குகள் ஈட்டப்படுவதற்கும் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வங்கிகள் கடந்த காலங்களில் வழங்கியுள்ளன.

எனினும் பல வங்கிகள் கொழும்பை பிரதானமாகக் கொண்டு செயற்படுவதனால் கிராமப்புற மக்கள் தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதில் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இந்நிலையினை மாற்றியமைக்க முயல்தல் வேண்டும். கிராம அபிவிருத்தி என்பது இன்று பலராலும் சுட்டிக்காட்டப்படுகின்ற விடயங்களில் ஒன்றாக மாறியுள்ளது.

இலங்கை பட்டயக் கணக்காய்வாளர் சங்கம் இலங்கையின் வங்கித் துறைகளுக்கு ஆற்றிவரும் சேவைகள் பாராட்டுக்குரியவை.

இலங்கை உட்பட அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் பொருளாதார அபிவிருத்தியை அடைவதில் சவால்களை எதிர்நோக்கி வருகின்றன.இச்சவால்கள் மேலோங்குவதற்கு இலங்கையில் ஒழுங்கமைக்கப்பட்ட பொருளாதார முறையொன்று காணப்படாமையும் காரணமாகும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# இலங்கையில் மாணவர்கள் மீது பாலியல் துஷ்பிரயோகம் அதிகரிப்பு

## யுனிசெப் அறிக்கை

(கொழும்பு)

இலங்கையில் 13 வயதிற்கும் 15 வயதிற்கும் உட்பட்ட பாடசாலை மாணவர்களில் பத்து வீதமானவர்கள் ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாகியுள்ளதாக யுனிசெப் நிறுவனத்தின் புதிய அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.பாடசாலை மாணவர்கள் 40 ஆயிரம் பேரின்மத்தியில் எடுக்கப்பட்ட ஆய்வின் போது இந்தத் தகவல் வெளியாகியுள்ளது.

இதன்படி 13 -15 வயதிற்கும் இடைப்பட்ட மாணவர்களில் 25 வீதமானோர் பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பில் எதுவும் அறிந்திருக்கவில்லை என்பது தெரியவந்துள்ளது.

பாலியல் தொடர்பான போதிய அறிவு இல்லாமையே இதற்கான காரணம் என யுனிசெப் சுட்டிக்காட்டியுள்ளது.

அறிக்கையின் படி 15 -19 வயதுதிற்கு இடைப்பட்ட மாணவர்களில் 14 வீதமானவர்கள் பல்வேறு பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களில் 65 வீதமானோர் குடும்ப உறவினர்களால் பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாகியுள்ளதாகத் தெரிவித்துள்ள யுனிசெப்பின் அறிக்கை இவர்களில் அதிகமானோர் ஆண் பிள்ளைகள் என்றும் குறிப்பிட்டுள்ளது.

# தங்கப்பதக்கத்திற்கு பதில் டக்ளசின் தகட்டுப் பதக்கம்

(கொழும்பு)

இந்து கலாச்சார அமைச்சினால் நடத்தப்பட்ட போட்டியொன்றில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு தங்கப் பதக்கம் வழங்கப்படுமென அறிவித்துவிட்டு தகட்டினால் செய்யப்பட்ட பதக்கங்களே வழங்கப்பட்டுள்ளன.

ஈ.பி.டி.பி கும்பலின் தலைவர் டக்ளசின் கட்டுப்பாட்டி லுள்ள இந்து கலாச்சார அமைச்சினால் நடத்தப்பட்ட போட்டியொன்றில் வெற்றி பெற்றவர்களுக்கு தங்கப்பதக்கம் வழங்கப்படுமென தெரிவிக் கப்பட்டிருந்து. இப் போட்டியில் பல பாடசாலை மாணவர்கள் கலந்து கொண்டு போட்டியில் பங்கேற்றனர்.

இவர்களுக்கான பரிசளிப்பு விழா கடந்த வாரம் கொழும்பில் இந்து கலாச்சார அமைச்சில் நடத்தப்பட்டது. இதில் யாழ்ப்பாணத்தில் இருந்தும் மற்றும் ஏனைய வடக்குக் கிழக்கு மாகாணங்களில் இருந்தும் பல மாணவர்கள் தமக்கு கிடைத்த பரிசில்களைப் பெற பல ஆயிரம் ரூபா நிதியை செலவு செய்து பலத்த சிரமத்தின் மத்தியில் கொழும்புக்கு சென்று இந்து கலாச்சார அமைச்சரிடம் பரிசில்களையும் பதக்கங்களையும் பெற்று வந்துள்ளனர்.ஆனால் தங்கப்பதக்கம் என வழங்கப்பட்டவைகள் அனைத்தும் தகட்டில் செய்யப்பட்டு தங்கமுலாம் பூசப்பட்டவையென தற்போது பரிசில்கள் பெற்றவர்கள் தெரிவிக்கின்றனர். பல ஆயிரம் ரூபாக்களைச் செலவு செய்து இதனைப் பெற்றதிலும் பார்க்க செல்லாமலே இருந்திருக்கலாம் எனவும் அவர்கள் கூறுகின்றார்கள். (32)

# தோட்ட உட்கட்டமைச்சு பதவி வழங்குவதில் சிறிலங்கா அரசாங்கத்திற்குள் இழுபறி நிலை

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்திலிருந்து இ.தொ.கா வெளியேறியுள்ளதால் ஏற்பட்டிருக்கும் தோட்ட உட்கட்டமைப்பு, சமூக அபிவிருத்தி அமைச்சுப் பதவியை யாருக்கு வழங்குவது என்பது தொடர்பாக அரசாங்கத்திற்குள் இழுபறி நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது. இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது;

தோட்ட உட்கட்டமைப்பு சமூக அபிவிருத்தி அமைச்சராகவிருந்த முத்துசிவலிங்கம் மற்றும் பிரதியமைச்சர் எம்.எஸ். செல்லச்சாமி ஆகியோர் பதவிகளை இராஜிணாமாச் செய்ததால் ஏற்பட்டுள்ள வெற்றிடத்தை நிரப்ப சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, இ.தொ. கா அரசாங்கத்துடன் இணைவதற்கு முன்னர் இந்த அமைச்சுப் பதவியை வகித்து வந்த சி.பி ரத்னாயக்கவுக்கு வழங்க முடிவுசெய்திருந்தார்.

ஆனால், சுகாதார அமைச்சர் நிமால் சிறிபாலடிசில்வா, மின்சக்தி எரிபொருள் பிரதியமைச்சர் மகிந்தானந்த ஆகியோர் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சை தமக்கு வழங்குமாறு கோரியுள்ளனர்.

இவ்விருவரும் சனாதிபதிக்கு நெருக்கமானவர்கள். எனவே சி.பி. ரத்னாயக்கவுக்கு இந்த அமைச்சுப்பதவி வழங்கப்படமாட்டாதென தெரியவருகிறது. வெளிநாட்டு விஜயத்தை முடித்துக்கொண்டு நாடு திரும்பியதும் இவ் அமைச்சு சி.பி. ரத்னாயக்காவுக்கு வழங்கப்படவிருந்த போதும் தற்போது அந்தத் தீர்மானம் சனாதிபதியினால் கைவிடப்பட்டுள்ளது.பெரும்பாலும் தோட்ட உட்கட்டமைப்பு, சமூக அபிவிருத்தி அமைச்சராக எவரையும் நியமிக்காது சனாதிபதி தன்னிடமே வைத்துக்கொண்டு ஆலோசகரை நியமித்து அமைச்சு அலுவல்களை முன்னெடுப்பாரென்றும் தெரியவருகின்றது.


## உறவுகளைவிட்டு உதிர்ந்த முத்துக்கு 5 ஆம் ஆண்டு நீங்காத நினைவலைகள்

தாயின் மடியில் 1982-04-19

தாய் மண்ணின் மடியில் 2000-10-20



### 2 ஆம் லெப்-புயலவன்

(குமாரசிங்கம் - கேதீஸ்வரன்)

2 ஆம் வட்டாரம் - புதுக்குடியிருப்பு

புயலாக வந்த பெரும் படைக்கு
புதியதொரு பாடம் புகட்டி
புதுப் பரணி படைத்த
புயலவனே எங்கையா - நீ சென்றாய்

சிங்கமென சீறிநின்ற
சிங்களப் படைக்கு
சிறுத்தையாக சீறிநின்று
சிரசெடுத்த புயல் புலியடா நீ

தமிழன்னை தந்த தனிச்சொத்தடா நீ
குமாரசிங்கமும் லட்சுமியும் பெற்ற பெரு முத்தடா நீ
ஐந்தென்ன ஐம்பது வருடம்தான் கடந்தாலும்
எம் இதயத்தின் அணையாத் தீப தீசனடா நீ

உன் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும்.
திரு.திருமதி குமாரசிங்கம் குடும்பம்
2 ஆம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு.

(6627)



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை

### கலைப்பீடம்

### ஈராண்டு பகுதிநேரப் பட்டப்பின் கல்வி டிப்ளோமா

### கற்கைநெறி 2005/2007

### புதிய அனுமதி

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தினால் நடத்தப்படும் மேற்படி கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் அரசாங்க பாடசாலைகளில் கடமையாற்றும் பட்டதாரி ஆசிரியர்களிடமிருந்தும் கல்வி நிர்வாகிகளிடமிருந்தும் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரிகள் 07.11.2005 அன்று 50 வயதுக்கு குறைந்தவர்களாக இருத்தல் வேண்டும்.

இக்கற்கை நெறி தொடர்பான விண்ணப்பப்படிவங்களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வியியற் துறையில் ரூபா 100.00 இற்கான பற்றுச்சீட்டினை சமர்ப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம். தபால் மூலம் பெற விரும்புவோர் நிதியாளர், யாழ். பல்கலைக்கழகம் என்ற பெயரில் பெறப்பட்ட ரூபா 100.00 இற்கான காசுக்கட்டளை அல்லது தபாற் கட்டளையுடன் ரூபா 5.00 பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட சுய முகவரியிடப்பட்ட தபால் உறையினையும் கல்வியியற்றுறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்புதல் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

### இக்கற்கை நெறிக்கான கட்டண விபரங்கள்

| | |
|---|---|
| பதிவுக் கட்டணம் | 750.00 |
| கற்கைநெறிக்கட்டணம் | 10,000,00 |
| நூலக வைப்புக் கட்டணம் | 500.00 (மீளப் பெறத்தக்கது) |
| நூலக கட்டணம் | 750.00 |
| மொத்தம் | 12,000.00 |

எழுத்துத் தேர்வு (பொது விவேகம், கல்வியியல் பொதுத் தகைமை என்னும் பாடங்கள்) மற்றும் நேர்முகத் தேர்வு இரண்டினதும் பெறுபேறுகளுக்கமைய தெரிவுகள் இடம்பெறும்.

கற்கை நெறிக்கு தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் பல்கலைக்கழகத்திலிருந்து 25 மைல் சுற்றாடலுக்குள் அமைந்துள்ள பாடசாலைக்கு இடமாற்றம் பெறுவதோடு, இக்கற்கைநெறிக்குப் பதிவு செய்யும் போது மேற்குறிப்பிட்ட இடமாற்றக் கடிதத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் யாவும் 07.11.2005 ஆம் திகதிக்கு முன்னர் கல்வியியற்றுறை அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். இக்குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

(18.10.2005) (சி.13082)

# காஷ்மீரில் நேற்றும் பூமியதிர்வு மக்கள் அலறியடித்து ஓடினர்

காஷ்மீர் மாநிலத்தில் நேற்றைய தினம் நான்கு தடவைகள் நில நடுக்கம் ஏற்பட்டுள்ளது.இதனால் அப்பகுதி மக்கள் பதறியடித்து வெட்ட வெளிகளுக்கு ஓடினர்.

முதல் நில நடுக்கம் அதிகாலை 12.02. மணிக்கும், இரண்டாவது நில நடுக்கம் 2.50 மணிக்கும் ஏற்பட்டது. அதன்பின் காலை 8.03, 8.46 மணிக்கும் இரண்டு தடவை நிலநடுக்கம் காஷ்மீர் மாநில மக்களை அதிர வைத்தது. பாகிஸ்தானை மைய மாகக் கொண்டு குலுக்கிய இந்த நில நடுக்கம் 5.2,5.3,5.4,5.8 என்ற ரிச்டர் அளவுகளில் பதிவானது.

அடுத்தடுத்து நிலநடுக்கம் காரணமாக சில இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டது. பாகிஸ்தானில் உள்ள பாலகோட் பகுதியில் பெரிய நிலச்சரிவு உண்டானது. இதனால் மக்கள் பீதியுடன் அலறியடித்துக் கொண்டு ஓடினார்கள்.

காஷ்மீரில் ஊரி மற்றும் தங்தார் பகுதிகளிலும் நில அதிர்வு கடுமையாக உணரப்பட்டது. இதனால் மக்கள்பெரும் பீதிக்குள்ளானார்கள்.



வீரப்பனின் கல்லறைக்கு அவரின் மனைவி முத்துலட்சுமி மலர்தூவும் காட்சி

## வீரப்பனின் நினைவுதினம் மூலக்காட்டில் அனுஷ்டிப்பு

கடந்த ஆண்டு தமிழக அதிரடிப் படையால் சுட்டுக் கொல்லப்பட்ட 'சந்தனக்கடத்தல் மன்னன்'என அழைகப்படும் வீரப்பனின் முதலாம் ஆண்டு நினைவுதின நிகழ்வு வீரப்பனின் சமாதிஅமைந்துள்ள மூலக்காட்டுப் பகுதியில் நினைவு கூரப்பட்டது.

இந்நிகழ்வில் கருத்துத் தெரிவித்த வீரப்பனின் மனைவி முத்து லட்சுமி தான் தொடங்கவுள்ள புதிய அமைப்பிலிருந்து ஒரு போதும் பின் வாங்க மாட்டேன் எனக் கூறினார்.

இந்நிகழ்வில் வீரப்பனின் புகழ் பாடும் ஒலிநாடா வெளியிடப்பட்டது. ஒலிநாடாவினை பழ நெடுமாறன் வெளியிட வீரப்பனின் மனைவி முத்துலட்சுமி பெற்றுக்கொண்டார்.

## போலி வாக்காளர்கள் சேர்த்தோர் மீது நடவடிக்கை

(சென்னை)

தமிழக வாக்காளர் பட்டியலில் இலட்சக் கணக்கில் போலிவாக் காளர்களைச் சேர்க்க முனைந்த தனிநபர்கள் மற்றும் கட்சிப் பிரமுகர்கள் மீது வழக்குப்பதிவுசெய்ய நடவடிக்கை எடுக்கும்படி தேர்தல் ஆணையகம் தமிழக தேர்தல் ஆணையாளருக்கு உத்தரவு வழங்கியிருக்கிறது.

வாக்காளர் பட்டியலில் புதிய வாக்காளர்களைச்சேர்க்க மே-31 ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்கப்பட்டிருந்தது. மே. 30 ஆம் திகதி பல பிரமுகர்கள் திட்டமிட்டு இலட்சக்கணக்கான போலி வாக்காளர்களைச் சேர்க்க விண்ணப்பங்களை ஒட்டுமொத்தமாகச் சமர்ப்பித்தனர். குறிப்பாக அ.தி.மு.க வைச் சேர்ந்த பொறுப்பாளர்கள் பல இலட்சக் கணக்கான போலி வாக்காளர் விண்ணப்பங்களைக் கொடுத்தனர். எனவே மொத்தம் 19 இலட்சம் விண்ணப்பங்கள் குவிந்தன. இதில் 13 இலட்சம் விண்ணப்பங்கள் போலியானவை என்று கண்டுபிடிக்கப்பட்டு அவை நிராகரிக்கப்பட்டன.

## ஒருங்கிணைந்து எதிர்கொள்வோம்

தமிழகத்தில் வரும் சட்டப் பேரவைத் தேர்தலை தி.மு.க தலைமையிலான சனநாயக முற் போக்குக் கூட்டணி ஒருங்கிணைந்து எதிர் கொள்ள வேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் ஏ.பி. வரதன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று செய்தியாளர்களிடம் பேசுகையிலேயே அவர்இதனைத்தெரிவித்தார்.


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

2005 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்று எமது கல்லூரிக்கு பெருமை சேர்த்த மாணவர்களையும் வழிகாட்டிய ஆசிரியர்களையும் வாழ்த்துகின்றோம்.



சி.பிரசாந்தன்
132 புள்ளி



ப. தயாளினி
142 புள்ளி



பு. தர்சன்
129 புள்ளி

கல்லூரிச் சமூகம்,
மு. மல்லாவிமத்திய கல்லூரி

(6865)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் – இலங்கை
### கலைப்பீடம்
### முழுநேரப் பட்டப்பின் கல்வி டிப்ளோமா
### கற்கைநெறி 2005/2006
### புதிய அனுமதி

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தினால் நடாத்தப்படும் மேற்படி கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் அரசாங்க பாடசாலைகளில் கடமையாற்றும் பட்டதாரி ஆசிரியர்களிடமிருந்தும், கல்வி நிர்வாகிகளிடமிருந்தும் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரிகள் 2005.11.07 அன்று 50 வயதுக்கு குறைந்தவர்களாக இருத்தல் வேண்டும்.

இக்கற்கைநெறி தொடர்பான விண்ணப்பப்படிவங்களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வியியற் துறையில் ரூபா 100.00 இற்கான பற்றுச்சீட்டினை சமர்ப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம். தபால் மூலம் பெற விரும்புவோர் நிதியாளர், யாழ். பல்கலைக்கழகம் என்ற பெயரில் பெறப்பட்ட ரூபா 100.00 இற்கான காசுக்கட்டளை அல்லது தபாற் கட்டளையுடன் ரூபா 5.00 பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட சுய முகவரியிடப்பட்ட தபால் உறையினையும் கல்வியியற்றுறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்புதல் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

### இக்கற்கை நெறிக்கான கட்டண விபரங்கள்

| | |
|---|---|
| பதிவுக் கட்டணம் | 750.00 |
| கற்கைநெறிக்கட்டணம் | 10,000,00 |
| நூலக வைப்புக் கட்டணம் | 500.00 (மீளப் பெறத்தக்கது) |
| நூலக கட்டணம் | 750.00 |
| மொத்தம் | 12,000.00 |

எழுத்துத் தேர்வு (பொது விவேகம், கல்வியியல் பொதுத் தகைமை என்னும் பாடங்கள்) மற்றும் நேர்முகத் தேர்வு இரண்டினதும் பெறுபேறுகளுக்கமைய தெரிவுகள் இடம்பெறும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் யாவும் 07.11.2005 ஆம்திகதிக்கு முன்னர் கல்வியியற்துறை அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். இக்குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

2005.10.18 (சி.13085)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

மாகாணமட்ட நல்லாசிரியர் விருதுக்காக எமது கல்லூரி ஆசிரியை

### திருமதி மங்களேஸ்வரி சிவனேஸ்வரன்

தெரிவு செய்யப்பட்டமையையிட்டு அவரைப் பாராட்டுவதோடு எதிர்காலத்திலும் அவர் சகல வெற்றிகளையும் பெற பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரிய நல்லுறவுச் சங்கம்
மு.மல்லாவி மத்திய கல்லூரி.

(6866)

## பொன்விழா அழைப்பிதழ்

1955 ஆம் ஆண்டு செல்வி.
மியூறியல் வையலற் ஹட்சின்ஸ்
அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட
இருள்நீக்கி ஒளிபரப்பும் கருணா
நிலையத்தின் பொன்விழாக்காண
அனைத்து உள்ளங்களையும்
அன்புடன் அழைக்கின்றோம்.

காலம்:-23.10.2005
இடம் :-கருணா நிலையம்,
A9 பிரதான வீதி,
கிளிநொச்சி.

தகவல்:-
கருணாநிலையக் குடும்பம்

(6864)

## முக்கிய அறிவித்தல்

நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனமும்,யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்களும் இணைந்து என்புமச்சை நோயினால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி பூநகரியைச்சேர்ந்த ராஜ்மோகன் ஜதுசன் என்ற நாலரை (4 2/1) வயதுச்சிறுவனது மேலதிக சிகிச்சைக்காக நிதிசேகரிப்பில் ஈடுபட்டுள்ளமை அண்மையில் பத்திரிகையில் பிரசுரமாகியது யாவரும்அறிந்ததே. தற்சமயம் எமது நிறுவனத்தின் அனுமதியின்றியும், எம்மால் வழங்கப்படும் பற்றுச்சீட்டின்றியும் சில மோசடிப் பேர்வழிகள் இச்சிறுவனது மேலதிக சிகிச்சைக்காக என்று நிதிசேகரிப்பில் ஈடுபட்டுள்ளதாக சேவைநிறுவனங்களிடமிருந்தும், வர்த்தக நிறுவனங்களிடமிருந்தும் எமக்கு முறைப்பாடு கிடைத்துள்ளது. எனவே இச்சிறுவனது மேலதிக சிகிச்சைக்காக நிதி வழங்க விரும்புவோர் தங்களிடம் நிதி சேகரிக்க வரும் நபர்கள் மருத்துவபீட மாணவர்கள் என்பதை உறுதிப்படுத்துவதுடன் அவர்களினால் வழங்கப்படும் அன்பளிப்புச் சிட்டையினை (ரிக்கற்) பெற்றுக்கொண்டும், நேரடியாக நிதி வழங்க விரும்புவோர் நலவாழ்வு அபிவிருத்தி நிறு வனம் 178 நாவலர் வீதி,யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந் துள்ள காரியாலயத்தில் பணத்தினைச் செலுத்தி பற்றுச்சீட்டிணைப் பெற் றுக் கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்வதுடன்,மோசப் பேர்வழிகளிடம் விழிப்பாக இருக்கும்படி தயவாகக்கேட்டுக்கொள்கின்றோம். மேலதிக தொடர்புகளக்கு T.P. 021-2228251

நிர்வாக இணைப்பாளர்,
நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனம்,
இணைப்பு அலுவலகம், யாழ்ப்பாணம். (சி.13084)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கற்சிலைமடு ஒட்டுசுட்டானைச் சேர்ந்த
செல்வி
### தங்கவேல் சிறிகலா B.A

06.10.2005 யாழ். பல்கலைக்கழகத்தில் கலைப்பிரிவில் பட்டம் பெற்றதை வாழ்த்தி மேலும் பல பட்டங்கள் பெற்று பல்லாண்டுகள் வாழ ஒட்டுசுட்டான் தான் தோன்றீஸ்வரரை பிரார்த்திக்கின்றோம்.

வாழ்த்துவோர்கள்
த. தனபால்ராஜ்,
த. சித்திராதேவி,
த.தர்சிகா,
த.தனசிகன்,
த.துளசிகா,
த.தினேறிகன்.

கற்சிலைமடு,
ஒட்டுசுட்டான்.

(6862)

# ஜேர்மன் தடகளப் பயிற்றுனர் விளையாட்டுத்துறையினர் சந்திப்பு




தமிழீழ தடகளச் சம்மேளனத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்ட ஜேர்மன் நாட்டு தொழில் ரீதியான தடகள பயிற்றுனர் டாக்டர் ஜோகின் பிறின்ஸ் தமிழீழ தாயகத்திற்கு வருகை தந்துள்ளார். இவருடன் தமிழீழ விளையாட்டுத் துறையின் பொறுப்பாளர் கி.பாப்பா, தமிழீழ தடகள சம்மேளனத்தின் தலைவர் தெய்வேந்திரம், யாழ். மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் றொகான் ராஜசிங்கம் ஆகியோர் சந்திப்பொன்றை நிகழ்த்தினர்.

இளையோர் செயற்பாட்டு நிறுவனத்தில் இடம் பெற்ற இச் சந்திப்பில் முல்லைத் தீவிலும், அம்பாறையிலும் சுனாமியினால் பாதிக்கப்பட்ட மூன்று பாடசாலைகளுக்கு விளையாட்டு நடவடிக்கைகளுக்கு நிதியுதவி அளிப்பதாகவும் மற்றும் தடகள வீரர்கள் பத்துப் பேரிற்கு ஜேர்மன் தூதரகம் ஊடாக உதவி புரிவதாகவும் ஜோகின்பிறின்ஸ் குறிப்பிட்டுள்ளார்.

மேற்படி பயிற்றுவிப்பாளர் விளையாட்டு விஞ்ஞானத் துறையிலும் தாவரவியலிலும் டாக்டர் பட்டம் பெற்றவர். இவர் பத்து நாட்கள் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து எமது தமிழீழத்தின் எட்டு மாவட்டங்களிலும் உள்ள 32 தடகள பயிற்றுனர்களுக்கு சிறப்புப் பயிற்சி வழங்குவார். இச் சிறப்பு பயிற்சிக்கான ஒழுங்குகள் அனைத்தையும் யாழ்.மாவட்ட தடகளச் சம்மேளனம் ஒழுங்கு செய்துள்ளது.

## இந். அணியின் தலைவராவதே இலட்சியம் என்கிறார் யுவராஜ்




இந்திய கிரிக்கெட் அணியின் தலைவர் ஆவதே தனது கனவு என யுவராஜ்சிங் கூறியுள்ளார்.இந்திய கிரிக்கெட் அணியின் இளம் வீரர்களில் ஒருவர் யுவராஜ்சிங் அதிரடியான ஆட்டத்தின் மூலம் பிரபலமான இவர் டுபாயில் நடந்த கிரிக்கெட் தொடர்பான நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டார். அப்போது அவர் நிருபர்களிடம் கூறியதாவது;

கிரிக்கெட் ஆடும் ஒவ்வொரு வீரருக்கும் அணியின் தலைவர் ஆக வேண்டும் என்ற எண்ணம் இருக்கும். அப்படிக் கிடைத்தால் அது மிகப் பெரிய கௌரவம் ஆகும். இந்திய அணியின் தலைவர் ஆகும் கனவு எனக்கும் உள்ளது தற்போது எனது கனவு முழுவதும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்துவதிலேயே உள்ளது. நானும் தலைவன் ஆவேன் என்ற நம்பிக்கை உள்ளது. அந்தப் பதவி கிடைக்கும்போது கிடைக்கட்டும். இந்திய அணியின் புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ள ராவிட் ஏற்கனவே பல ஆண்டுகள் துணைத் தலைவர் பதவியில் இருந்து அனுபவம் பெற்றவர். அவர் வீரர்களுக்கு எப்பொழுதுமே ஆதரவாக இருக்கக்கூடியவர். நிச்சயம் அவர் இந்திய அணியைத் திறமையாக வழி நடத்திச் செல்வார்.

கங்குலி ஐந்து வருடங்களாக தலைவர் பதவியில் இருந்தவர். அணியின் ஒவ்வொரு வீரர்களின் நிறை குறைகளும் அவருக்குத் தெரியும். அதேபோல் ராவிட்டுக்கும் தெரியும். கங்குலி- சப்பல் இடையிலான பிரச்சினை பற்றிச் சொல்ல வேண்டும் என்றால் ஒரு அணி என்று இருந்தால் ஏற்றம் இறக்கம் இருக்கத்தான் செய்யும் இந்தப் பிரச்சினையில் இருந்து இந்திய அணி விரைவில் விடுபட்டுவிடும் என்ற நம்பிக்கை உள்ளது. ஒருங்கிணைந்து ஆடுவதே தற்போது எங்களது குறிக்கோள் ஆகும்.

பயிற்சியாளர் சப்பலின் யோசனைப்படி கால்களை நகர்த்தி ஆடுவதில் மாற்றம் செய்து உள்ளேன். இந்த முயற்சி நல்ல பலனைத் தந்துள்ளது. இவ்வாறு யுவராஜ்சிங் கூறியுள்ளார்.

## நியூசிலாந்து–தென்ஆபிரிக்கா 20:20 கிரிக்கெட் போட்டி!

நியூசிலாந்து- தென் ஆபிரிக்க அணிகள் இடையே 20 இற்கு 20 ஓவர் கொண்ட கிரிக்கெட் போட்டி வருகிற 21 ஆம் திகதி நடைபெறவுள்ளது. நியூசிலாந்து கிரிக்கெட் அணி தென் ஆபிரிக்காவில் பயணம் செய்து போட்டிகளில் பங்கேற்கவுள்ளது. அதன்படி இவ்விரு அணிகள் இடையே மூன்று டெஸ்ட் மற்றும் ஐந்து ஒரு நாள் போட்டி கொண்ட தொடர் நடைபெறும். ஒரு நாள் போட்டி வருகிற 23 ஆம் திகதி ஆரம்பமாகும். இரண்டாவது ஒரு நாள் போட்டி 28 ஆம் திகதியும், மூன்றவாது ஆட்டம் 30 ஆம் திகதியும், நான்காவது ஆட்டம் நவம்பர் நான்காம் திகதியும் ஐந்தாவது மற்றும் இறுதிப் போட்டி நவம்பர் ஆறாம் திகதியும் நடைபெறும் என அறிவிக்கப்படுகிறது. இந்த நிலையில் நியூசிலாந்து தென் ஆபிரிக்கா இடையே 20 இற்கு 20 ஓவர் கொண்ட கிரிக்கெட் போட்டி நாளை மறுநாள் (21 ஆம் திகதி) ஜோகன்ஸ்பர்க்கில் நடைபெறும்.

இந்தஅணி வீரர்கள் விபரம் வருமாறு:-

நியூசிலாந்து:- பிளமிங் (தலைவர்), வெட்டோரி, ஆந்த்ரே ஆடம்ஸ், நாதன் ஆஸ்லே, ஷேன்பாண்ட், பிராங்ளின், மார்ஷல், ஜேம்ஸ் மார்ஷல், மெக்லம், பெக்மில்லன், மில்ஸ், ஜேக்கப் ஓரம், ஜீதன், பட்டேல், ஸ்டைரிஸ், வின்சென்ட்.

தென் ஆபிரிக்கா:- சுமித் (தலைவர்), கலிஸ், போஜே, பவுச்சர், டிவில்லியர்ஸ், டிப்பென்னர், கிப்ஸ், ஆந்த்ரே ஹால், ஜஸ்டின் ஹெம்ப், லாங்கேவெல்த், அல்பி மோர்கல், ஆந்த்ரே நெல், நிதினி, பொலக், பிரின்ஸ்

## மெக்ராத், பிளின்டொப் தரவரிசையில் முன்னேற்றம்

அண்மையில் நடைபெற்ற அவுஸ்திரேலிய அணியுடனான சுப்பர் சீரிஸ் டெஸ்ட் தொடரின் பின் இங்கிலாந்து பந்து வீச்சாளர் அன்ரு பிளின்டொப் டெஸ்ட் தரவரிசையில் நான்காம் இடத்திற்கு முன்னேறியுள்ளார். அவர் டெஸ்ட் போட்டியில் ஏழு விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.மெக்ராத் முதலிடத்தை பிடிததுள்ள வேளையில் ஸ்ரீவ் ஹார்மிசன் (இங்கிலாந்து) தொடர்ந்தும் 14ஆவது இடத்திலுள்ளார்.இப்போட்டியில் இரு இன்னிங்சிலும் முறையே 111,77 என்ற ஓட்டங்களைப்பெற்றதால் அவுஸ்திரேலிய துடுப்பாட்டவீரர் ஹெயடன் துடுப்பாட்ட வரிசையில் ஆறாமிடத்தைப்பெற்றுள்ளார்.புதிய தரவரிசைப்படி பத்து இடங்களைப்பெறும் துடுப்பாட்டவீரர்கள்:-கலிஸ் (தெ. அ) 894, லாரா (மே.இ) 855, பொண்டிங் (அவு) 855. ராவிட்(இந்) 851, சேவாக்(இந்)825, கெய்டன் (அவு)803, சந்தர்போல்(மே.இ) 789, ரெஸ்கொதிக் (இந்)778, 9)இன்சமாம் உல்ஹக் (பாக்)778, ஸ்ரோஸ்(இங்)760.

பந்துவீச்சு

மெக்ராத்(அவு)881, வோன்(அவு)874, முரளிதரன்(இல)871, பிளின்டொப்(இங்)793, பொலக்(தெ.அ)787, என்ரினி(தெ.அ)784, சமிந்தவாஸ்(இல) 770, சொகைப்அக்தர் (பாக்)770, கோகாட்(இங்)762, 10) பதான்(இந்) 756

## — இங். உதைபந்தாட்ட அணியின் —
## முன்னாள் தலைவர் ஜோனி கெயின்ஸ் வாகன விபத்தில் பலி;

இங்கிலாந்து உதைபந்தாட்ட அணியின் முன்னாள் பிரபல மத்திய வரிசை வீரரும் அணித் தலைவருமான ஜோனி கெயின்ஸ் கார் விபத்தில் மரணமானார். புல்ஹாம் என்ற இடத்தில் பிறந்த இவர் அங்குள்ள கழகத்துக்காக விளையாடி வெற்றி பெற்றுள்ளதுடன் இங்கிலாந்து தேசிய அணியிலும் பங்கு பற்றியுள்ளார். 1954ஆம் ஆண்டு பெல்பஸ்ட்டில் அயர்லாந்து அணிக்கெதிராக ஆடி ஒரு கோலைப் போட்டார். அணி இரண்டுக்குப் பூச்சியம் என்ற ரீதியில் வென்றது அத்துடன் அதே ஆண்டிலும், 1958, 1962 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற உலகக் கிண்ணப் போட்டிகளில் பங்கேற்றுள்ளார். இவர் 1960 ஆம் ஆண்டு அணித் தலைவரானார்.

அவரது சக வீரரான அலன் முலரி இவரது இழப்பு ஈடு செய்ய முடியாதது எனக் குறிப்பிட்டுள்ளதுடன் அவருக்கிணையான வீரர் ஒருவர் இதுவரை உருவாகவில்லை என்றார்.விபத்தில் அவரது மனைவி படுகாயமடைந்துள்ளார். மோதிய காரின் சாரதி சிறு காயங்களுடன் தப்பி விட்டார். இறக்கும் போது அவருக்கு வயது 71.

## சபீர் அகமட்டின் பந்துவீச்சில் தவறில்லையென அறிவிப்பு

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் பந்து வீச்சாளர் சபிர் அகமட்டின் பந்து வீச்சில் குறைபாடு இருப்பது பற்றி ஆராய்ந்த மேற்கு அவுஸ்திரேலிய பல்கலைக்கழகம் அது தொடர்பில் தவறில்லை என தனது தீர்ப்பை வழங்கியதையடுத்து இங்கிலாந்துடனான தொடரில் அவர் பங்கெடுக்கும் வாய்ப்புக் கிடைத்துள்ளது.

இவர் கடந்த ஜூன் மாதத்தின் பின்னர் போட்டிகளில் பங்குபற்றாதிருந்தார். இவர் 15 பாகைக்கு மேலாக மணிக்கட்டை வளைத்து பந்து வீசுவது விதிமுறைகளுக்கு முரணானது எனக் கூறப்பட்டது. எனினும் கடந்த வருடம் இதற்கு அனுமதி வழங்கப்பட்டது. எனினும் பின்னர் அகமத் மீது தடை கொண்டு வரப்பட்டது. தற்போது பரிசோதனை அறிக்கை கிடைத்த பின்னர் மீண்டும் அவருக்கு அதேபாணியில் பந்து வீச அனுமதிக்கப்பட்டுள்ளது.




சபிர் அகமத் 46 டெஸ்ட் விக்கெட்டுக்களையும் 53 ஒருநாள் போட்டி விக்கெட்டுக்களையும் வீழ்த்தி யுள்ளார்.

எனினும் அவர் சொகைப் அத்தர், மொகமட்சமி, நவிட்உல்ஹசைன் உமர்குல் ஆகியோரை முந்திக் கொண்டு இங்கிலாந்து தொடரில் பங்குபற்ற வேண்டியுள்ளதாகக் கூறப்படுகிறது.


## சானியாவை நடிக்க வைக்க சிம்பு எடுத்த முயற்சி தோல்வி



சானியாமிர்சாவை தனது படத்தில் நடிக்க வைக்க சிம்பு எடுத்த முயற்சி தோல்வியில் முடிந்தது.

தற்போது சிம்பு இயக்கி நடித்து வரும் ‘வல்லவன்’ படத்தை மாறுபட்ட விதத்தில் படமாக்கி காட்ட வேண்டும் என்பதில் தீவிரமாக உள்ளார். இந்தப் படத்தில் நான்கு வேடங்களில் வரும் அவருக்கு நயன்தாரா, சந்தியா, ரீமாசென் ஆகியோர் ஜோடியாக நடித்து வருகிறார்கள்.

‘மன்மதன்’ படத்தில் கிரிக்கெட் வர்ணணையாளர் மந்திரா பேடியை நடிக்க வைத்தார். அதுபோல, உலக அளவில் பரபரப்பை ஏற்படுத்தி வரும் இந்திய டென்னிஸ் வீராங்கனை சானியாமிர்சாவை ‘வல்லவன்’ படத்தில் நடிக்க வைக்க வேண்டும் என்பதில் முழுமூச்சுடன் இறங்கினார்.



சிம்பு தொலைபேசியில் சானியா மிர்சாவைத் தொடர்பு கொண்டு பேசியுள்ளார். அப்போது தனது படத்தில் நடிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறார். அதற்கு சானியா, ‘உங்கள் அழைப்புக்கு நன்றி. சினிமாவில் நடிக்க வேண்டும் என்ற ஆர்வம் எனக்கு இல்லை. டென்னிஸ் விளையாட்டில் சிறப்பான இடம்பிடிக்க வேண்டும் என்பதுதான் எனது ஆசை’ என்று கூறியுள்ளார்.

அதற்கு சிம்பு, ‘விளம்பரப்படங்களில் நடிக்கிறீர்களே’ என்க, உடனே சானியா, “டென்னிஸ் போட்டிகளில் பங்கேற்க பணம் தேவைப்படுகிறது. அதனால்தான் விளம்பரப் படங்களில் நடிக்கிறேன். முழுநேரத்தையும் சினிமாவில் செலவழிக்க விரும்பவில்லை. டென்னிசில் சாதிக்க வேண்டும் என்ற இலட்சியம்தான் எனக்கு முக்கியம். அதற்காகத்தான் உழைக்கிறேன்...” என்று கூறியுள்ளார்.


தொலைபேசியை வைக்கும் முன்பு, “நடிக்கும் ஆசை வந்தால் உங்கள் படத்தில்தான் முதலில் நடிப்பேன்” என்று சிம்புவுக்கு சமாதானம் சொல்லியிருக்கிறார் சானியா மிர்சா எனத் தகவல்கள் கூறுகின்றன.

## தியரிகென்றி சாதனை

ஸ்பார்ட்ட பிரேக் அணிக்கும் ஆர்சனல் அணிக்குமிடையில் நடை பெற்ற பிரிமியர் லீக் கால்பந்தாட்டப் போட்டியில் ஆர்சனல் வீரர் தியரி கென்றி பெற்ற சாதனை கோல்கள் இரண்டினாலும் ஆர்சனல் அணி இரண்டுக்குப் பூச்சியம் என்ற கணக்கில் போட்டியை வென்றுள்ளது.

இதுவரை போட்டிகளில் ஆர்சனல் அணிபெற்ற கோல்களில் 186 ஆவது கோலை கென்றி பெற்றுக் கொடுத்ததன் மூலம் மற்றுமொரு வீரரான இயன்ரைட்டின் சாதனையை முறியடித்துள்ளார். இந்த சாதனையை சமன்படுத்த 15 நிமிடங்களின் முன்னர் அவர் காயமடைந்து சற்று ஓய்வில் இருந்து திரும்பினார்.

## சிந்தனைக்கு



கட்டி எழுப்பப்படவுள்ள தமிழீழத்தின் வளர்ச்சிக்கு ஆயுதத்தை மட்டும் நம்பியிராமல், அனைத்துத்துறைகளிலுமே வளரவேண்டும் என்பதில் நான் அக்கறையாக உள்ளேன்.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 20.10.2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@yahoo.com

# இரவல் சிந்தனை!

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சனாதிபதி வேட்பாளரும், ஐக்கிய மக்கள்* சுதந்திர முன்னணி சின்னத்தில் போட்டியிடுபவருமான மகிந்தராஜபக்ஷவின் தேர்தல் விஞ்ஞாபனம் எதிர்பார்த்தது போன்றே வெளிவந்துள்ளது. அதாவது 'மகிந்தவின் சிந்தனைகள்' என்ற பெயரில் வெளிவந்துள்ள இவ் விஞ்ஞாபனத்தில் இனப்பிரச்சினை தொடர்பாக பலராலும் எதிர்பார்க்கப்பட்ட, எதிர்வு கூறப்பட்ட விடயங்களே இடம் பெற்றுள்ளன.

அதாவது தமிழர் தாயகக்கோட்பாடு, தமிழர்களின் சுயநிர்ணய உரிமை என்பன முற்றாக நிராகரிக்கப்பட்டுள்ளதோடு, சுனாமி அனர்த்த பொதுக்கட்டமைப்பு, விடுதலைப் புலிகள் முன்வைத்துள்ள இடைக்காலத்தன்னாட்சி அதிகாரசபைக்கான யோசனைகள் என்பவையும் நிராகரிக்கப்பட்டுள்ளன. இனப்பிரச்சினையைப் பொறுத்து ஐக்கிய இலங்கைக்குள் சகல மக்களும் கௌரவத்துடன் வாழக்கூடிய சமாதானத்தை ஏற்படுத்துவேன் என்பதே மகிந்த ராஜபக்ஷவின் கூற்றுக்களாகவுள்ளன.

மகிந்த ராஜபக்ஷவிடம் இருந்து இதனைத் தவிர வேறு எதையும் யாரும் எதிர்பார்க்கவில்லை. ஏனெனில் சுனாமிப் பொதுக்கட்டமைப்பு விடயத்தில் ஏற்பட்டுள்ளபிரச்சினை காரணமாக ஐக்கியமக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தில் இருந்து வெளியேறியிருந்த ஜே.வி.பி யின் 12 நிபந்தனைகளையும், யுத்த நிறுத்தம், சமாதானப் பேச்சுவார்த்தை ஆகியவற்றை நிராகரிக்கும் ஜாதிக ஹெல உறுமயவின் 12 நிபந்தனைகளையும் ஏற்றுக்கொண்டு ஒரு தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிடுகையில் எவ்வாறு சுயமானதொரு நிலையில் தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட முடியும்? இரவல் சிந்தனையல்லவா வெளியிடமுடியும்.

ஆகையால்தான் என்னவோ இத்தேர்தல்விஞ்ஞாபனம் சுதந்திரக் கட்சி வேட்பாளராக தன்னாலேயே வெளியிடப்பட்டது என்பதை உறுதிசெய்வதற்காக 'மகிந்தவின் சிந்தனைகள்' என பிரதமர் மகிந்த ராஜபக்ஷவினால் பெயரிடப்பட்டதோ தெரியவில்லை.

ஆனால் ஒன்று மகிந்த ராஜபக்ஷ எந்தளவிற்குச் சூழ்நிலையின் கைதியாக இருந்துள்ளார் என்பதற்கு இது நல்லதொரு எடுத்துக் காட்டாகும். அதாவது சனாதிபதி சந்திரிகாவின் நிராகரிப்பையும் மீறித் தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டதோடு மட்டுமல்ல, சுதந்திரக் கட்சி பேச்சுக்குத்தானும் கூறிக் கொள்ளும் அதிகாரப் பரவலாக்கல் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்பதைக் கூட அவரால் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் இணைத்துக்கொள்ள முடியவில்லை.

இந்நிலையில் பார்க்கையில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ சுதந்திரக்கட்சியின் சனாதிபதி வேட்பாளர் என்பதைவிட ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிடும் சனாதிபதி வேட்பாளர் எனக் கூறுவதே பொருத்தப் படானதாக இருக்கும்.

ஆனால் மகிந்த ராஜபக்ஷவிடமிருந்து இத்தகையதொரு தேர்தல் விஞ்ஞாபனமே வரும் என்பது தமிழ் மக்களினால் எதிர்பார்க்கப் பட்டதொன்றே. ஏனெனில் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு என்பதையே நிராகரிக்கும் வகையில் செயற்பட்டு வரும் ஜே.வி.பி, ஜாதிக ஹெல உறுமய கட்சிகளுடன் மகிந்த ராஜபக்ஷ கூட்டுச்சேர்கையில் அவரிடம் இருந்து இனப்பிரச்சினை தொடர்பாக சிறந்ததொரு ஆலோசனை வரும் என எதிர்பார்ப்பதற்கு தமிழ்மக்களின் அரசியல் மட்டம் அடிமட்டத்தில் இல்லை.

ஆகையினால், இன்று மகிந்த ராஜபக்ஷவின் தேர்தல் விஞ்ஞா பனத்தை ஆராயவேண்டியவர்கள் இனப்பிரச்சினைக்குச் சமாதான பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வு கண்டுவிடலாம் எனவலியுறுத்தி வரும் வெளிநாட்டவர்களே. சிலவேளை இவ்வெளிநாட்டவர்கள் மகிந்த ராஜபக்ஷவை நிராகரித்து ரணில் மீது நம்பிக்கை வைத்திருத்தல் கூடும். ஆனால் ரணில் விக்கிரமசிங்க வெற்றிபெற்றால் மட்டும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு கண்டுவிட முடியுமா?

ஏற்கனவே ரணில் விக்கிரமசிங்கவும் இனப்பிரச்சினைக்கு விடுதலைப்புலிகளுடன் பேசித்தீர்வு காணப்படும் எனக் கூறிக்கொண்டாலும் அவரும் அவ்விடயத்தில் எத்தனை உறுதியாகவுள்ளார் என்பது கேள்விக்குரியதே. ஏனென்றால் அவர் அண்மைக்காலத்தில் வலியுறுத்தும் கருத்துக்கணிப்பு என்பது தீர்விற்குப் போடப்படும் முட்டுக்கட்டையே ஆகும்.

இதேசமயம் இத்தடைகளை / முட்டுக்கட்டைகளை ரணில் விக்கிரமசிங்க வலுப்படுத்தத் தேவையில்லை. மகிந்த தலைமையில் அணியாகத் திரண்டுள்ள இனவாத சக்திகளே பலப்படுத்திவிடும். அதாவது தீர்வுத்திட்டத்தைத் தோற்கடிக்க ரணில் விக்கிரமசிங்கவே இதனைத் தோற்றுவித்துள்ளார் எனலாம்.

இந்நிலையில் கேட்கப்படும் கேள்வியானது இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்று எட்டப்படுமா என்பதே ஆகும். இனப் பிரச்சினைக்கு அரசியல்தீர்வு காணப்பட வேண்டும். விடுதலைப் புலிகள் பேச்சுவார்[illegible]க்குத் திரும்ப வேண்டும் எனவும் கோரும் வெளிநாட்டு சக்திகளி[illegible]ல் இதற்கு உறுதி அளிக்க முடியுமா? சிங்கள ஆட்சியாளர்களுடன் நீண்டதொரு அனுபவத்தின் பின்னரே தமிழ் மக்கள் தனியரசு கோரியமையும், ஆயுதங்களைக் கையில் எடுத்தமையும் ஆகும். ஆனால் அதனைச் சர்வதேசம் இதுவரை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆயினும், இன்னும் சிறிது காலத்தில் தமிழரின் நிலைப்பாட்டை ஆதரிக்க வேண்டிய தேவை, நிர்ப்பந்தம் அவற்றிற்கு ஏற்பட்டே ஆகும்.

# நிமலராஜனின் 5 ஆம் ஆண்டு நினைவுநாள் யாழ்.இல் அனுஷ்டிப்பு



(யாழ்ப்பாணம்)

2000 ஆம் ஆண்டின் ஒக்ரோபர் 19 ஆம் திகதி தனது வீட்டில் வைத்து சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜனின் ஐந்தாம்ஆண்டு நினைவு நிகழ்வுகள் நேற்று குடாநாட்டில் அனுஷ்டிக்கப்பட்டது.

முன்னதாக .நிமலராஜனின் கல்லறை அமைந்துள்ள கொஞ்சேஞ்சி மாதாசேமக்காலையில் அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன.

மாலை நிகழ்வுகள் யாழ். பல்கலைக்கழக ஊடக வளங்கள் பயிற்சி மையம் அமைந்துள்ள சித்திகோமில் இடம்பெற்றது.

வடஇலங்கை பத்திரிகையாளர் சங்கம் மற்றும் நிமலராஜன் ஞாபகார்த்த அமைப்பு என்பவை இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளன.

வடஇலங்கை பத்திரிகையாளர் சங்கத்தின் தலைவர் சி.கதிர்காமத்தம்பி தலைமையில் இடம்பெற்ற நினைவு நிகழ்வில், நிமலராஜனின் உருவப்படத்திற்கு அவரது நெருங்கிய நண்பரும் விரிவுரையாளருமான விமல் சாமிநாதன் மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார்.

நினைவுச்சுடரினை ஊடகவளங்கள் பயிற்சிமையத்தின் பணிப்பாளர் பேராசிரியர் க.சண்முகதாஸ் மற்றும் குடாநாட்டிலிருந்து வெளிவரும் நாளிதழ்களது பிரதம ஆசிரியர்கள் ஏற்றிவைத்தனர்.

நினைவுரைகளை "உதயன்" பத்திரிகையின் பிரதம ஆசிரியர் சி.கானமயில்நாதன், வலம்புரி பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ந.விஜயசுந்தரம், யாழ். தினக்குரல் ஆசிரியர் க.வாமதேவன் வீரகேசரியைச் சேர்ந்த என்.இராமச்சந்திரன், டெய்லிமிரரைச் சேர்ந்த த.பரமேஸ்வரன், ஐ.பி.சி செய்தியாளர் வே.தவச்செல்வன் உள்ளிட்ட பலர் ஆற்றினர்.

பிரதம உரையை பேராசிரியர் க.சண்முகதாஸ் ஆற்றினார். முன்னதாக ஊடகவியலாளர்களது மௌன வணக்கம், மலரஞ்சலிகள் இடம்பெற்றன. குடாநாட்டைச் சேர்ந்த நூற்றிற்கும் அதிகமான ஊடகவியலாளர்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

முடக்கிவைக்கப்பட்டுள்ள நிமலராஜன் படுகொலை வழக்கு தொடரப்பட வேண்டுமென அங்கு உரையாற்றிய பலரும் வேண்டுகோள் விடுத்திருந்ததுடன் நெருக்கடியான காலகட்டத்தில் நிமலராஜன் குடாநாட்டில் இராணுவ நெருக்கடிகளின் கீழான மக்கள் அவலங்களை சர்வதேச உலகிற்கு வெளிக்கொண்டு வந்ததையும் நினைவு கூர்ந்தனர். (41)

# மாரவெல சினைப்பரை பகுப்பாய்வுக்கு உட்படுத்த நீதிபதி உத்தரவு

சிறிலங்கா அமைச்சர் கதிர்காமரின் படுகொலையுடன் சம்பந்தப்பட்டதென்ற சந்தேகத்தின் பேரில் கைப்பற்றப்பட்டுள்ள சினைப்பர் துப்பாக்கியையும் ஏழு கைக்குண்டுகளையும் அரச இரசாயன பகுப்பாய்விற்கு உட்படுத்து மாறு கொழும்பு நீதிபதி குசலா சரோஜினி வீரவர்த்தன நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை உத்தரவிட்டார்.

இந்தக் கைக்குண்டுகளை அரச இரசாயனப் பகுப்பாய்விற்கு அனுப்புவதற்கு முன்னர் அதனை செயலிழக்கச் செய்யுமாறும் விசேட அதிரடிப் படைப் பொறுப்பதிகாரிக்கு நீதிபதி உத்தரவிட்டார்.

கைப்பற்றப்பட்ட கைக்குண்டுகளையும் சினைப்பர் துப்பாக்கியையும் இரசாயனப் பகுப்பாய்விற்கு உட்படுத்த உத்தரவிடுமாறு கொழும்பு குற்றப்புலனாய்வுப் பிரிவினால் நீதவானிடம் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கமையவே அவர் இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

கதிர்காமரின் படுகொலை தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளுக்கமைய இந்தத் துப்பாக்கியையும் தோட்டாக்களையும் கைப்பற்றியதாக நீதிமன்றுக்குத் தெரிவித்த கொழும்பு குற்றப்புலனாய்வுப் பிரிவினர் இந்த சம்பவத்துடன் தொடர்புடையதாகச் சந்தேகிக்கப்படும் வவுனியாவைச் சேர்ந்த குருகுமா காளிமுத்து மற்றும் எஸ்.சிவரஞ்சன் ஆகிய இருவரைக் கைது செய்து காவலில் வைத்திருப் பதாகவும் தெரிவித்தனர். இந்த வழக்கின் மேலதிக விசாரணைகள் எதிர்வரும் 24 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப் பட்டுள்ளது.

# சிறிலங்கா சுகாதாரத்துறை ஊழியர்கள் வேலைநிறுத்தம்

சிறிலங்காவில் சுகாதாரத்துறை ஊழியர்களின் வேலைநிறுத்தம் நேற்று புதன்கிழமை முழு அளவில் நடைபெற்றது.

ஊதியஉயர்வு உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி காலை எட்டு மணி முதல் இந்த அடையாள வேலை நிறுத்தப் போராட்டம் நடந்தது. இதனால் இன்றைய மருத்துவ சேவைப் பணிகள் ஒத்தி வைக்கப்பட்டுள்ளன.

இந்தப் போராட்டம் குறித்து கொழும்பு பிரதான வைத்தியசாலை இயக்குநர் ஹெக்டர் வீரசிங்க கூறுகையில், அனைத்து அறுவைச் சிகிச்சைகளையும் ஒத்திவைத்துள்ளோம். இருப்பினும் அவசர மருத்துவ சேவைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றார்.

இந்தப் போராட்டத்தினால் நோயாளர்கள் பெரும் அவதிக்குள்ளாகினர்.

சுகாதாரத்துறை ஊழியர்களின் போராட்டம் தேவையற்றது என்று சுகாதாரத்துறை அமைச்சக செயலாளர் நிஹால் ஜயதிலக்க கருத்துத் தெரிவித்துள்ளார்.

இன்றைய போராட்டத்தின் முடிவில் தங்கள் கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிட்டால் அடுத்த கட்ட நடவடிக்கை என்ன என்பது குறித்து சுகாதாரத்துறை ஊழியர்களின் தொழிற்சங்கக் கூட்டமைப்பு விரைவில் அறிவிக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அரச வாகனங்களை ஐ.ம.சு.முன்னணி தேர்தல் பிரச்சாரத்துக்குப் பயன்படுத்துகிறது

*– ஐ.தே.கட்சி தே. ஆணையாளரிடம் முறைப்பாடு*

அரசாங்கத்தின் வாகனங்களையும் சொத்துக்களையும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தனது தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்கு பயன் படுத்துவதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான எட்டு வாகனங்களையும் உடமைகளையும் கூட்டமைப்பு தேர்தல் பிரச்சாரத்திற்கு பயன்படுத்துவதாக ஐக்கிய தேசியக் கட்சி தேர்தல் ஆணையாளரிடம் முறைப்பாடு செய்துள்ளது.

இந்த விடயம் குறித்து தேர்தல் ஆணையாளர் மற்றும் மின்வலு எரிசக்தி அமைச்சர் ஆகியோருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியினர் தெரிவித்தனர்.

இது தொடர்பாக பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவர், இலஞ்ச மற்றும் மோசடி விசாரணை ஆணையாளர் போன்றோருக்கும் முறைப்பாடு செய்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் உப தலைவர் தயா பெல்பொல தெரிவித்தார்.

இதேவேளை பாதுகாப்பு அமைச்சுக்குச் சொந்தமான வாகனங்கள் ஹெரவப்பொத்தானை, கடகஸ்திலிய மற்றும் கலேன் பிந்துனுவெவ ஆகிய பகுதிகளில் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்கு பயன் படுத்தப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

தேர்தல் நடவடிக்கைகளுக்கு பொதுச் சொத்துக்கள் பயன்படுத்தப் படுவது தேர்தல் சட்டங்களை மீறும் செயல் என்பதால் இந்த விடயம் தொடர்பாக பொது மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி கேட்டுக் கொண்டுள்ளது. (32)

கடற்புலிகளின் துணைப்படை

# நாவரசன் பயிற்சிப்பாசறையின்

# ௨ஆவது அணி பயிற்சி ஆரம்பம்



கடற்புலிகளின் துணைப்படை நாவரசன் பயிற்சிப் பட்டறையின் இரண்டாவது அணியினரது பயிற்சி கடந்த சனிக்கிழமை ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

பாசறை மைதானத்தில் போராளி டயஸ் தலைமையில் ஆரம்பமான இந்தப் பயிற்சி நிகழ்வில் பொதுச் சுடரினை போராளி டயசும் தேசியக்கொடியினை கடற்புலி களின் மன்னார் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழனும் ஏற்றினார்.

மாவீரன் நாவரசனின் திருவுருவப் படத்திற்கான மலர் மாலையினை அன்னை வேளாங்கன்னி மீனவர் சங்கத் தலைவர் அணிவித்தார்.அக வணக்கத்துடன் உறுதிமொழி எடுக்கப்பட்டு பயிற்சி ஆரம்பமானது.

சுனாமி நிவாரணப் பணிக்காக உருவாக்கப்பட்ட

# கிரிக்கெட் உதவித்திட்டம் சிறிலங்கா அரசால் நிறுத்தம்

பாதிக்கப்பட்ட சிறார்கள் பெரும் ஏமாற்றம்

சுனாமி நிவாரணப் பணிகளுக்காக உருவாக்கப்பட்ட சிறிலங்கா கிரிக் கெட்டின் கிரிக்கெட் உதவித் (cricketAid) திட்டம் சிறிலங்கா விளையாட்டுத் துறை அமைச்சு மற்றும் சிறிலங்கா கிரிக்கெட் என்பவற்றால் இடைநிறுத் தப்பட்டது எமக்கு பெரும் அதிர்ச்சி யையும் ஏமாற்றத்தையும் தருகிறது என இளையோர் செயற்பாட்டு நிறுவனத்தினர் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு, வடமராட்சி கிழக்கு, யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களில் சுனாமியால் பாதிக்கப்பட்ட 175 சிறுவர்களுக்கு மாதாந்தம் 1000 ரூபா வீதம் கல்வி நிதியாக வழங்க முன்வந்த மேற்படி செயல்திட்டம் கிளிநொச்சி மத்திய கல்லூரியில் பிரமாண்டமான முறையில் அங்குரார்ப் பணம் செய்யப்பட்டது எனினும் அங்குரார்ப்பண நிகழ்வுக்கு அப்பால் எவ்வித செயற்பாடுகளும் நடை முறைப்படுத்தப்படாமையால் இது தொடர்பாக கிரிக்கெட் உதவி நிறுவனத்தின் பணிப்பாளர் ஹசான் திலகரத்தினவிற்கு எழுதப்பட்ட கடிதங் களுக்கும் இதுவரை எவ்வித பதில் களும் கிடைக்கவில்லை ஹசான் திலகரத்தினவும் அப்பதவியிலிருந்து விலக்கப்பட்டுள்ளார் என்பதனுடன் கிரிக்கெட் உதவி நிறுவனத் தின் செயற்பாடுகளும் இடைநிறுத் தப்பட்டுள்ளதாக பத்திரிகைச் செய்திகள் தெரிவித்திருந்தன.

2005 ஆண்டு சனவரி ஐந்தாம் திகதி உருவாக்கப்பட்ட கிரிக்கெட் உதவி தனது இலக்கு எதனையும் அடையாமல் இடைநிறுத்தப் பட்டுள்ளது. இச் செயல்திட்டத் திற்கென 200 மில்லியன் ரூபா நிதி திரட்டுவதற்காக அவுஸ்திரேலியா மற்றும் பிரிட்டன் நாடுகளில் கிரிக்கெட் போட்டிகள் நடாத்தப்பட்டன. இச் செயல்திட்டத்தை முடக்கியதன் மூலம் கிரிக்கெட்டின் மூலம், நிறைவேற்றத்திட்டமிடப்பட்டிருந்த பெற்றோரை இழந்த சிறுவர்களுக் கான வளர்ப்பு பெற்றோர் திட்டம், கிரிக்கெட் கிராமத் திட்டம் ஆகிய கிரிக்கெட் மூலமான மனிதாபிமானப் பணிகள் தடைசெய்யப்பட்டன. சுனாமியால் பாதிக்கப்பட்ட மக் களுக்கு இழைக்கப்பட்ட அநீதியா கும். இதுவே இன்றைய அரசாங் கத்தின் மக்கள் நலன் தொடர்பான கொள்கைகளின் வெளிப்பாடாகவும் அமைகிறது சிறிலங்கா முழுவதும் 748 சுனாமியால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் ஏமாற்றப்பட்டுள்ளனர். சிறுவர் நலன் தொடர்பாக அக்கறை காட்டுபவர்களும் இந்த நடவடிக்கை தொடர்பாக மௌனம் சாதிப்பது எமக்கு ஆச்சரியத்தைத் தருகிறது என இளையோர் செயற் பாட்டு நிறுவனத்தினர் மேலும் தெரிவித துள்ளனர்.

## கிராம சேவகர் சுட்டுக்கொலை

வவுனியாவில் கிராமசேவை யாளரான பெரேரா வீரசிங்கம் என்பவர் நேற்று மாலை 4.15 மணிக்கு சுட்டுக்கொல்லப்பட்டார்.

53 வயதான அவர் செட்டிகுளம் கந்தன்குளம் என்ற இடத்திற்கு சென்று திரும்பிக்கொண்டிருக்கும் போது துப்பாக்கிதாரிகளினால் சுட்டுக்கொல்லப்பட்டதாக வவுனியா பொலிசார் தெரிவித்துள்ளனர்.

## கூட்டம்

(அலுவலகசெய்தியாளர்)

இன்று முற்பகல் 10.00 மணிக்கு விவசாயக்குழுக்கூட்டமும் பிற்பகல் 2.00 மணிக்கு மாவட்ட அத்தியா வசியசேவைகள் குழுக்கூட்டமும் கிளிநொச்சி மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் தயவு செய்து சம்பந்தப்பட்ட சகல ரையும் தவறாது கலந்து கொள்ளு மாறு கிளிநொச்சி அரசாங்க அதிபர் கேட்டுள்ளார். (கு,தீ.)

## கலந்துரையாடல்

2005 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெறவுள்ள க.பொ.த. (சாதாரணதரப்) பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான கர்நாடக சங்கீதம், பரதநாட்டியம் ஆகிய பாடங்களுக்கான செயன் முறைப் பரீட்சை தொடர்பான கலந் துரையாடல் இன்று காலை 10.00 மணிக்கு கிளிநொச்சி வலயக்கல்விப் பணிமனை, கல்வி வளநிலையத்தில் நடைபெறவுள்ளது. இக்கலந்து ரையாடலில் சங்கீத, நடனபாட ஆசிரியர்களையும் மேற்படி பாடத் திற்கு நியமனம் பெற்ற ஆசிரியர்கள் இல்லாதவிடத்து அப்பாடங்களைக் கற்பித்துக் கொண்டிருக்கும் ஆசிரியர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு வலயக்கல் விப்பணிப்பாளர் அறிவிக்கிறார்.

## வடக்கு -கிழக்கு விளையாட்டு விஞ்ஞான கல்லூரிக்கான அடிக்கல் நாட்டல்



வடக்கு-கிழக்கு விளையாட்டு விஞ்ஞானக் கல்லூரிக்கான அடிக்கல் கிளிநொச்சியில் நேற்று புதன்கிழமை நாட்டி வைக்கப்பட்டது.

முற்பகல் 10.00 மணியளவில் கிளிநொச்சி அறிவியல் நகரில் இந்நிகழ்வு நடைபெற்றது.

நிகழ்வில் தமிழீழதேசியக்கொடியினை தமிழீழ விளையாட்டுத்துறைப்பொறுப்பாளர் கி.பாப்பா ஏற்றிவைத்தார்.

விளையாட்டு விஞ்ஞானக் கல்லூரிக்கான முதலாவது அடிக்கல்லினை தமிழீழ கல்விக்கழகப்பொறுப்பாளர் வெ.இளங்குமாரன் நாட்டிவைத்தார்.

விளையாட்டதிகாரிகள் மற்றும் விளையாட்டு வீரர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

**வெள்ளைப்...**

கொடியினை முல்லைத்தீவு மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் முகுந்தன் ஏற்றினார். அடுத்து தமிழர் புனர்வாழ்வுக் கழகக் கொடியை தமிழர் புனர்வாழ்வுக் கழக துணை நிறைவேற்றுப் பணிப்பாளர் றீகன் ஏற்ற இனிய வாழ்வில்லக் கொடியை அவ்வில்லத்தின் இயக்குனர் ஏற்றினார். தொடர்ந்து மங்கல விளக்குகளை தமிழீழ அரசியல் துறை மகளிர் பொறுப்பாளர் தமிழினி, புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அதிபர் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

தொடர்ந்து நடைபெற்ற அரங்க நிகழ்வுகளில் சிறப்புரைகளை தமிழீழ அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் சோ. தங்கன், அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழினி, முல்லை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் முகுந்தன் ஆகியோர் நிகழ்த்த, ஆசியுரையினை முல்லை மாவட்ட இந்து கலாச்சார உத்தியோகத்தர் மோகன் நிகழ்த்தினார். அடுத்து உரைகளை இனிய வாழ்வில்ல இயக்குனர் திருமதி கா.நடனச்சந்திரன் இலங்கை சிறுவர் பாதுகாப்பு பகுதி பிரதிநிதி செல்வா ஆகியோர் நிகழ்த்தினர்.

இனிய வாழ்வில்ல விழிப்புலனற்ற மாணவன் பு.இராசகுமாரின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் இனிய வாழ்வில்ல மாணவர்களின் கலை நிகழ்வுகளும் விசேட நிகழ்வாக இசை நிகழ்வும் இடம் பெற்றன.

(ச.லோ,08)

**79கொத்தணி..**

தணி வாக்குச் சாவடிகள் அமைக்கபடவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளான வன்னி தேர்தல் மாவட்டத்தில் வவுனியா தேர்தல் தொகுதியில் 18 ஆயிரத்து 857 வாக்களர்களும் மன்னாரில் 16 ஆயிரத்து 131 வாக்களர்களும் முல்லைத்தீவில் 65 ஆயிரம் வாக்களர்களும் இந்த கொத்தணிச் சாவடிகளில் வாக்களிக்கவுள்ளனர்.

**டக்ளஸ்..**

சலுகைகள் பெற்ற டக்ளஸ் தேவானந்தா, மேற்படி ஒப்பந்தத்தில் முன்னின்று கைதட்டி வரவேற்றமை சனாதிபதி சந்திரிகாவுக்கு பலத்த ஏமாற்றத்தை அளித்துள்ளதாகவும். அதனைத்தொடர்ந்து டக்ளஸ் தேவானந்தா சனாதிபதி சந்திரிகாவை சந்திப்பதற்கு சந்திரிகாவிடம் அனுமதிகோரியிருந்த போதிலும் சனாதிபதி சந்திரிகா டக்ளஸ் தேவானந்தாவை சந்திக்க மறுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனையடுத்து ஈ.பி.டி.பியின் ஆலோசகராக இருக்கும் கலாநிதி ஒருவரை அழைத்துப்பேசிய சந்திரிகா மேற்குறித்த தனது விசனத்தை வெளியிட்டுள்ளார்.

**கூட்டமைப்பு..**போவதாக ஜே.வி.பி யின் இணையத் தளம் ஒன்றில் செய்தி வெளியிட்டுள்ளது. அவ்வாறு புலிகள் கொலை செய்யப் போவதாகக் கூறிவிட்டு ஜே.வி.பி யினர்தான் எங்களைக் கொலை செய்யத்திட்டம் தீட்டி வருகின்றனர். ஆகவே எமக்கு உரிய பாதுகாப்பை அரசாங்கம் வழங்கவேண்டும்.தமிழ் மக்களின் போராட்ட நியாயத் தன்மையையும், விடுதலைப் புலிகளின் நிலைப்பாடுகளையும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் சர்வதேச அரங்கில் வெளிப்படுத்தி வருகின்றனர். தமிழர்களின் சுயநிர்ணய உரிமையின் அவசியத்தை வலியுறுத்தி வருகின்றனர். அதனைத் தடுக்கவே எம்மைக் கொலை செய்ய ஜே.வி.பி. திட்டமிடுகின்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

**கடந்த..**படையில் இந்த பட்டியல் தயாரிக்கப்படுவதோடு ஊழல் மற்றும் முறைகேடுகளை கட்டுப்படுத்தும் நாடுகள் அந்தப் பட்டியலில் கூடுதலான புள்ளிகளை பெறுகின்றன. இலங்கையில் இது தொடர்பான நிபுணர்கள் மற்றும் முதலீட்டாளர்களின் கருத்துக்கள் பெற்றுக் கொள்ளப்பட்டதன் பின்னரே இந்த அறிக்கை உருவாக்கப்பட்டுள்ளதாக ரான்ஸ் பரன்ஸி இன்டர்நஷனல் நிறுவனத்தின் இலங்கைக்கான நிறைவேற்று பணிப்பாளர் ஜே சி வெலியாமுன கூறினார்.

இதன்படி கடந்த ஆண்டில் ஊழல்கள் குறைந்த நாடுகள் பட்டியலில் 70ஆம் இடத்தில் இருந்த இலங்கை இவ்வாண்டில் 78ஆம் இடத்திற்கு வீழ்ந்துள்ளது. கடந்த ஆண்டில் ஊழல்கள் தொடர்பான சர்வதேச கணிப்பீட்டில்3.5 புள்ளிகளைப் பெற்றிருந்த இலங்கை இவ்வாண்டில் 3.2 புள்ளிகளையே பெற்றுள்ளது. இவ்வாண்டு ரான்ஸ்பரன்ஸி இன்டர்நசனல் அறிக்கையின் அடிப்படையில் ஆகக் குறைந்த ஊழல் நாடாக ஐஸ்லாந்தும், பின்லாந்து, நியுசிலாந்து, டென்மார்க், சிங்கப்பூர் ஆகிய நாடுகள் அதற்கு அடுத் தடுத்த நிலையில் காணப்படுகின்றன. உலகில் ஊழல் அதிகமான நாடுகளுள் பங்களாதேஷ், கெய்ட்டி என்பன பட்டியல் படுத்தப்பட்டுள்ளன.

**தமிழ்..**

இன்றைய சூழ்நிலையில் இனவாத சக்திகளுடன் கூட்டுச் சேர்ந்துள்ளவர்கள் எதிர்காலத்தில் ஆட்சி மாறினால் அவர்களுடன் சேர்ந்தும் தமிழ் தேசியத்தைக் காட்டிக் கொடுக்கத் தயங்கமாட்டார்கள். இந்த நிலையில் ஐக்கிய தேசியக்கட்சி இது தொடர்பாக என்ன நிலையைக் கொண்டுள்ளது. எதிர்காலத்தில் இராணுவத்துடன் சேர்ந்தியங்கி தமிழ் தேசியத்திற்கு எதிராகவும், தமிழ் பேசும் மக்களுக்கு எதிராகவும் இராணுவ ரீதியில் இவர்கள் இயங்குவதை ஐக்கிய தேசியக் கட்சி ஆதரிக்குமா? என்பதனை உடனடியாக வெளிப்படுத்த வேண்டும்.

அது மட்டுமன்றி, தமிழ் தேசியத்திற்கு எதிரான சகல ஆயுதக்குழுக்கள் பற்றிய தமது நிலையினை தெளிவான அறிக்கை மூலம் தெரிவிப்பதோடு, [illegible]மாதான சக்திகளுடன் இது பற்றிய எழுத்து மூலமான உடன்பாடு ஒன்றை உடனடியாக வெளிப்படுத்த வேண்டும் எனவும் கோரப்பட்டுள்ளது

**திருமலையில்..**

இதில் திருகோணமலை மாவட்ட விடுதலைப் புலிகளின் கட்டளைத் தளபதி சொர்ணம் கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கியுள்ளார்.

இதன் போது தமிழ் தேசிய எழுச்சி நிகழ்வை சிறந்த முறையில் முன்னெடுப்பது குறித்து உறுதியளிக்கப்பட்டுள்ளது. (32)

**புலிகளின்..**

பட்டதிலும், இந்த ஆளில்லா வேவு விமானம் பாரிய பங்கு வகித்தது என்பது குறிப்பிடத்தக்கது.

1990 களில் இது போன்ற ஆறு விமானங்களை கிளிநொச்சி பிராந்தியத்தில் சிறிலங்கா விமானப் படை பயன்படுத்தி வந்தது. இவற்றில் பெரும்பாலானவை விபத்தினாலும், தீப்பிடித்தும் நாசமடைந்து விட்டதாக அப்போதே சிறிலங்கா ஊடகங்கள் குற்றம் சாட்டியிருந்தன. இந்த விமானங்கள் அனைத்தும் இஸ்ரேலியத் தயாரிப்பு ஆகும்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 20 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.